தென்மொழி

எத்தனை முறை எனைச் சிறையிலிட் டாலுமே என் கொள்கை மாறுது!

எத்தனை முறைஎனைச் சிறையிலிட் டாலுமே
என் கொள்கை மாறுது! — ஒரு
பித்தனை, ஆண்டியைப் போல்என்றன் உள்ளமும்
பேதைமை கூறுது!
எத்தனை அரசியல் புரட்டர்கள்! எத்தர்கள்!
ஏய்ப்பதே வாழ்வு(அ)வர்க்கே! — ஒரு
சித்தனை, அறிவனைப் போல்மக்கள் வாழ்க்கையே
சிந்தனை, செயல் எனக்கே!

ஏச்சுகள் இழிவுகள் எவையுமென் தொண்டினை
இம்மியும் அசைப்பதில்லை! — வாள்
வீச்சுகள், குண்டுகள் உடல் பிளந் தாலுமே
விளைவினில் மாற்றமில்லை!
பூச்சுகள், புனைவுகள், புரட்டுகள், எத்துகள்,
பொய்—எனைச் சார்வதில்லை! — விடும்
மூச்சுகள் ஒவ்வொன்றும் தமிழ்,இனம், நாடு-எனும்
முழக்கினில் சோர்வதில்லை!

அரசெனை எதிர்த்தாலும், அதிகாரம் பணித்தாலும்
அச்சமென் நெஞ்சிலில்லை! — ஒரு
முரசினைப் போலவே கொள்கை முழக்குவேன்!
மூச்சிலும் கெஞ்சலில்லை!
உரசியென் உடலினைப் பாறையில் தேய்த்தாலும்
உறுதியில் குறைவதில்லை! — தமிழ்
அரசினை நிறுவவே உண்கிறேன்; உடுக்கிறேன்!
அஃதின்றி மறைவதில்லை!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 25
ஓலை : 9

விலை:
உருபா: 2-00

நமக்கு வந்த மடல்கள்.

• : *1414* : அன்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய ஐயா அவர்கட்கு,

வணக்கம். தஞ்சைத் தன்னுரிமை மாநாட்டின் பொருட்டுத் தளைப்படுத்தப்பட்டு, அண்மையில் வெளிவந்தீர்கள் என்ற செய்தி அறிந்தேன். எங்கே தமிழுரிமைக்குக் களம் என்றாலும் அங்கே முன்னிற்கும் தங்கள் தறுகண்மையைப் போற்றுகிறேன்.

நானும் அம் மாநாட்டில் பங்கு கொள்ளத் துடித்தேன். ஒப்புக்கேனும் ஓர் அழைப்பு வராமை ஒரு காரணமென்றாலும் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்த வேறு சில அலுவல்களால் இயலவில்லை.

கலைஞர் எழுத்தாலும் சொல்லாலும் நம்மிடமும், செயலால் தமிழினப் பகைவர் பக்கமும் நிற்பதையே அவருடைய ஆட்சி ஏற்பட்டதிலிருந்து கண்டு வருகிறோம். தமிழினத்திற்கு என்ன போகூழோ! பொறுப்பை ஏற்குமுன் இருந்த தமிழனைப் பொறுப்பை ஏற்ற பிறகு காண முடியவில்லை.

''சாண் ஏற முழம் சறுக்கும்'' என்பதே தமிழின வாழ்வாக இருந்து வருகிறது. இந்நிலை என்றுதான் மாறுமோ? ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது. நமக்கெல்லாம் நிரம்ப வேலை உள்ளது.

அன்புடன் —அரு. கோபாலன்.
ஆசிரியர் 'எழுகதிர்' —சென்னை 94.

○ : *1415* : பேரன்புடையீர், வணக்கம். தமிழுக்குத் தலைவர் என்றும்—காவலர் என்றும் தங்களைத் தாங்களே பிதற்றிக் கொண்டும் பிழைத்துக் கொண்டும், ஊரை ஏமாற்றிக் கொண்டும் சிலர் வாழும் இந்த நாட்டில் போலித்தனமான இதழ்களைக் கணக்கின்றி ஆடை களைந்த அணங்குகளின் பாழாய்ப் போன படங்களுடன் வெளியிட்டுப் பண்பாட்டைப் பாழாக்கும் பாதைகள் பல வாழும் இந்த நாட்டில்—கோடிக்கணக்கான பணத்தைத் திரைப்படச் சாய்க்கடையில் கொட்டிக் களிக்கும் கோமாளிகள் மலிந்த இந்த நாட்டில்—அன்போ அறிவோ பண்போ இன்றி, மாக்கள் போல் வாழும் மக்கள் நிறைந்த இந்த நாட்டில்—''உண்மைத் தொண்டு,' ''நேர்மை' 'ஒழுங்கு' என்று தன்னந் தனி மாந்தராய் ஓயாமல் உழைத்து-உழைத்து உள்ளம் குலைகிறீர்; உடல் உருகுகிறீர்; உயிர் வாடுகிறீர்; வேறொரு மாந்தராய் இருந்திருந்தால் இதுபோன்ற ''தொண்டு''க் கந்தலை கழிசடைகளை எல்லாம் (இந்த நாட்டில் தொண்டென்றால் அதன் பொருள் அப்படித் தானே) தூரத் தூக்கி எறிந்து விட்டு உணவு 'உடை' உறையுள் என்ற ஒன்றுக்கே இடம் தேடி ஓடிச் சென்றிருப்பார், 'உலகியல் நூறு' 'நூறாசிரியம்' என்ற அறிவு ஆக்க நூல்களை அவ்வளவு எளிதில் எந்த ஒரு மாந்தனாலும் ஆக்க முடியாது. படைக்க இயலாது. இயற்கையின் இனிய கொடை அவை. திருக்குறள் போன்று! எனினும் இறுதிவரை அப்படியே இருக்கிறீர்கள்! புரிந்து கொள்ள முடிகிறது. குயில் இறுதி வரை பாடத்தான் செய்யும். என் அழியா அன்பின் வாழ்த்துகள்!

அன்புள்ள —அருள்மணி, பெங்களூர்-51.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

இம்மாதச் சிறப்பு மடல்:

தென்மொழிப் பாசறையின் பணி!

போற்றுதலுக்கும் வணக்கத்திற்குமுரிய எங்கள் ஐயா அவர்களுக்கு வணக்கம்.

இந்த மடலைத் தென்மொழியில் வெளியிடுவதற்காக எழுதுகிறேன். சுவடி 25-ஓலை-2-இல் வெளியான கே. சுப்பு என்பாரது மடலுக்கு (ம. எண்: 1366) மறுப்பெழுத வேண்டியவனாகவுள்ளேன். ''தென்மொழி'' எனக்குச் சற்றுக் காலம் தாழ்ந்து கிடைத்ததால் இப்போதுதான் அம்மடலைக் காணவும் அதனால் இம்மடலை எழுதவும் நேர்ந்தன.

பொதுவுடைமை பேசும் நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக உருசியா முதல் அல்பேனியா வரை பொதுவுடைமை என்ற கட்சியின் பெயரை முதற்கொண்டு மாற்றிக் கொண்டு மக்கள் முன் வரத் தொடங்கியுள்ள புரட்சிக் காலம் இது! அடிப்படையில் உண்மையான பொதுவுடைமைக் கொள்கை திருவள்ளுவர் போன்ற தமிழ் அறிஞர்களால் கண்டு காட்டப் பெற்றது. இதனைப் பெரும் பேரறிஞர் பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கள் எல்லா இடங்களிலும் வலியுறுத்தி வருவதுடன், தாமே பொது வாழ்வில் வேறு எந்தத் தனியாரோ இயக்கத் தலைவரோ, செய்து காட்ட முடியாத, பொதுமை வாழ்வில் தம்மையும் தம் குடும்பம் முழுவதையும் ஈடுபடுத்திக் கொண்டு, கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருகிறார் என்பதைச் சுப்புகள் உணர வேண்டும். இலெனின் சிலைகளைக் கூட உருமேனியாவில் பொது இடங்களில் அகற்றி வருகிறார்கள். அல்பேனியாவில் இசுடாலின் சிலை, படங்கள் பொது மக்களால் அழிக்கப் படுகின்றன. உருசியாவில் பாராளுமன்ற அவைத் தலைவரும் கோர்ப்பசேவின் அரசியல் எதிரி என்று கருதப் பெறுபவருமான எல்சுதெயின் பொதுவுடைமைக் கட்சி என்னும் பெயரை உடனே மாற்றினால்தான் மக்கள் முன் மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்று வெளிப்படையாகவே கூறியுள்ளார். ஏன் இந்த இழிநிலை அந்தப் பொதுவுடைமை பேசிய நாடுகளுக்கு? அங்கெல்லாம் வன்முறையும் நிலமுதலாளியத்தைக் கட்சிக் காலியர் கைப்பற்றி அடாவடியாக அத்துமீறி மக்களை அலைக்கழிப்பதையும் பொதுவுடைமையின் பெயரால் செய்து வந்தார்கள், இப்போது மக்கள் விழித்துக் கொண்ட காரணத்தால், வளர்ந்து வரும் உலக நாடுகளுடன் சேர்ந்து முன்னேற கோர்ப்பசேவ் போன்றவர்கள் பொதுவுடைமைக் கொள்கையையே குழிதோண்டிப் புதைத்து வருகிறார்கள்.

அண்மையில் பிரான்சின் தொலைக் காட்சியினர், மாசுகோவில் பொதுவுடைமைக் கட்சிக்கான பல மாடிக் கட்டடங்களைக் கட்சியினர் வெட்கத்தால் பயன்படுத்திக் கொள்ளாமல் வெறுமையாக வைத்துள்ளதையும், அதே நேரத்தில் 30, 40 குடும்பங்கள் வாடகை கூடச் செலுத்த முடியாத வறுமை காரணமாக புறக்கணிக்கப் பட்ட வீடுகளைக் கைப்பற்றி ஏழ்மையும் வறுமை-

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவளம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

சுவடி: 25] தி.பி. உ0உக மேழ-கட. (மே-ஆக. 90') [ஓலை: 9

அய்யாவே பாவேந்தே!

—அய்யாவே பாவேந்தே!
அன்றைக்கும் உம்மை
ஆதரிக்க வில்லை. இவ் வரசும், இந் நாடும்!
பொய்யாக இன்றைக்கும்
நூற்றாண்டு விழாவைப்
புரையோடும் புன்மையொடும்
ஆர்ப்பாட்டத் தோடும்
செய்யாத விளம்பரங்கள் வேடிக்கை யோடும்
செய்கின்றார்; மகிழ்கின்றார்! போதாதா உமக்கே?
எய்யாத பெரும்புகழைச் செய்துவிட்டார்; எனினும்
எக்கருத்தைச் சொன்னீர்கள், அதை மறந்து விட்டார்?

தமிழ்வாழச் சொன்னீர்கள்; தமிழால்வாழ் கின்றார்!
தமிழினத்தின் முன்னேற்றம் கருதிடச்சொன் னீர்கள்!
இமிழ்வானம் எட்டும்வரை பொருள்குவித்து விட்டார்!
இந்நாட்டை உயர்த்தத்தான் சொன்னீர்கள்; அதனால்
தமிழ்அரசைத் தில்லியிலே மதிக்கின்ற வாறு
தாளங்கள் மேளங்கள் கொட்டுகின்றார்! இனியும்
எமிலுயர்வு தாழ்வில்லை! வடவர்களும் இங்கே
இருக்கின்ற தமிழர்களும் ஒருமைகாக் கின்றார்!

இந்தியினை எதிர்த்திடவே சொன்னீர்கள்! தமிழர்
இந்தியினை எதிர்த்தபடி இந்திகற்க லானார்!
செந்தமிழில் கல்விகற்கச் சொன்னீர்கள்! இவரும்
செந்தமிழைக் கற்கின்றார், ஆங்கிலத்திற் கிணையாய்!
'எந்தமிழர் இனமொன்றே; சாதியொழித் திடுக'
என்றீர்கள்! இடவொதுக்கல் சாதியினால் செய்தார்!
'செந்தமிழ்நாட் டைத்தனிநா டாக்குக' என் றீர்கள்!
செய்கின்றார், செய்கின்றார், செய்துகொண்டே உள்ளார்?

சிலைவைத்தார் உங்களுக்கே! நூற்றாண்டு விழாவைச்
சிறுபள்ளி முதலாகக் கல்லூரி வரைக்கும்,
கலைவிழாக்கள், பாட்டரங்கம், பட்டிமன்றம் என்றே
கணக்கின்றி ஊர்தோறும் நகர்தோறும் நடத்தி
அலையலையாய் மக்களுடன் கொண்டாடி விட்டார்!
ஆகாகா! உங்கள்புகழ் வானுயர்த்தி விட்டார்!
மலையாதீர், பாவேந்தே! அமைச்சர்களும் பிறரும்
மாண்புடனே வாழ்கின்றார், தமிழ்மாண்பைக் கொன்றே!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நெஞ்சினில் ஒளிநீ! பெருஞ்சித் திரன்நீ!
விஞ்சிடும் அன்பில் பாய்ந்திடும் புனல்நீ!
கொஞ்சிடும் தமிழ்நீ! கூனிலா அறிவுநீ!
மஞ்சமர் மனைநீ! வணங்குமென் கோயிலே!

பாட்டினில் பொருள்நீ! பார்வையில் பனிநீ!
கோட்டினில் குயில்நீ! பெருஞ்சித் திரன்நீ!
ஏட்டினில் குறள்நீ! எழுத்தினில் தமிழ்நீ!
கோட்டையில் கொடிநீ! வணங்குமென் கோயிலே!

பூவினில் மல்லி! பொழுதினில் காலை!
மாவினில் நீலம்! மாணிக்க மணிநீ!
பாவினில் உணர்ச்சி! பெருஞ்சித் திரன்நீ!
கோவிலில் சிலைநீ! வணங்குமென் கோயிலே!

படையினில் முதல்நீ! பண்பினில் சுனைநீ!
நடையினில் வேழம்! பெருஞ்சித் திரன்நீ!
உடையினில் வெள்ளை! உள்ளத்தில் வானம்;
விடையினில் தெளிவு! வணங்குமென் கோயிலே!

கட்டிய வீடுநீ! கலைகளில் ஓவியம்!
கிட்டிய தேன்நீ! கேடிலாப் பால்நீ!
பெட்டியில் பணம்நீ! பெருஞ்சித் திரன்நீ!
கொட்டிடும் முரசு! வணங்குமென் கோயிலே!

பாய்வதில் புலிநீ! பகைகளுக் கிடிநீ!
காய்வதில் கதிர்நீ! கவின்நிலாக் குளிர்நீ
ஆய்வதில் அறிஞன்! பெருஞ்சித் திரன்நீ!
தாய்மையில் மழைநீ! வணங்குமென் கோயிலே!

—பாவலர். இளஞ்சித்திரன்!—

பொறியியற் கல்வியைத் தமிழில் கற்பிக்க முடியுமா?

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் வ. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் துணைவேந்தராக இருந்த போது "பொறியியற் கல்வியைத் தமிழில் கற்பிக்க முடியுமா?" என்பது பற்றிக் கண்டறியக் கருத்தரங்கு ஒன்று நடத்தினர். நூற்றுக்கும் மேற்பட்ட பொறியாளர்கள் அக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்: அக்கருத்தரங்கில் கலந்து கொண்ட மின்துறைப் பொறியியல் வல்லுநர் பேராசிரியர் இரா. கணேசன் அவர்கள்,

"பொறியியல் கல்வியைத் தமிழில் நடத்த முடியும். இப்போதே நடத்த முடியும். பொறியியல் துறையில் ஏராளமான நூல்கள் வெளிவந்து விட்டன. தமிழில் எழுதப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பொறியியல் துறைப் பாடநூல்கள் இன்னும் அச்சிடப்படாமல் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கரையான்கள் தின்று கொண்டிருக்கின்றன. அவற்றை உடனே வெளியிட ஆவன செய்ய வேண்டும். பாடநூல்கள் வெளி வரும் வரையில் நாம் காத்திருக்கத் தேவையில்லை. வரும் கல்வி-ஆண்டிலேயே-நம் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலேயே பொறியியல் வகுப்புகளைத் தொடங்கலாம். திருச்சியில் உள்ள மண்டலப் பொறியியல் கல்லூரியில் ஆய்வுகளைச் (Experiments) செய்து கொள்ளலாம். நாங்கள் தமிழில் பாடம் நடத்துகின்றோம். எங்கள் பேச்சை நாடாப் பதிவு செய்து பொத்தகங்களாக வெளியிட்டுக் கொள்ளுங்கள். தமிழில் படித்துப் பொறியியல் பட்டம் பெறுபவர்களுக்குத் தமிழக அரசின் பொதுப்பணித்துறையிலும் போக்குவரத்து நிறுவனங்களிலும், டான்சி; சிட்கோ போன்ற அரசுச் சார்பான நிறுவனங்களிலும் வேலை தரப்படும் என்னும் உறுதிமொழியைத் தெரிவிக்கும் வகையில் தமிழ் வாயிலாகப் பொறியியல் படிக்க முன்வரும் மாணவர்களுடன் தமிழக அரசு ஓர் உடன்படிக்கை (Agreement) செய்து கொள்ளவேண்டும்.

உண்மையில் பொறியியல் பட்டப்படிப்புகளைத் தமிழில் நடத்துவதற்குரிய வழி வகைகளைக் கண்டறிவதற்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் இந்தக் கருத்தரங்கைக் கூட்டியிருப்பின் நான் கேட்டுக்கொண்டபடி உடனே-வரும் கல்வி ஆண்டிலேயே-தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் பொறியியல் வகுப்புகளைத் தொடங்குங்கள். இல்லை, பொறியியல் பாடங்களைத் தமிழில் கற்பிக்கக் கூடாது என்பதற்கான காரணங்களைத் தேடி அறிவதற்காக இந்தக் கருத்தரங்கைக் கூட்டியிருந்தால்-துணைவேந்தர் தாம் விரும்பியபடி செய்து கொள்ளட்டும். துணைவேந்தர் அவர்கள் தம்முடைய கருத்தை உடனே இந்த அவையில் தெரிவிப்பாராக" என்று கேட்டுக் கொண்டார். உடனே துணைவேந்தர் அவர்கள் எழுந்து "திரு. இரா, கணேசன் சொல்கிறபடி உடனே வரும் கல்வி ஆண்டிலேயே தமிழில் பொறியியல் பாடங்-

மதுச் சிந்தனைகள்!

ஃ எப்பொழுதும் உயர்ந்த கொள்கைகளை மக்கள் எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்களாக்க முடியாது.

ஃ எந்த ஒரு செயலையும் பாவம் என்றோ புண்ணியம் என்றோ எவராலும், எல்லாக் காலத்திலும், எல்லா இடத்திலும் தீர்மானித்துவிட முடியாது. ஒரு செயலை நல்லது என்றோ கெட்டது என்றோதான் தீர்மானிக்க முடியும்.

ஃ மது அருந்துவதைத் தவறு என்றோ குற்றம் என்றோ சொல்லி-விட முடியாது. அது பொதுவாக ஒரு தீமையான பழக்கம் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

ஃ மது என்பது ஒரே வகையான குடிப்பு அன்று. அது பல்வேறு வகையான குடிப்புகளைக் குறிக்கும் பொதுவான ஒரு சொல்; உணவு என்பதைப் போல.

ஃ ஒரு பொருளை உணவாக ஏற்றுக் கொள்வதும் கொள்ளாத-தும் அவரவர் விருப்பத்தையும் தேவையையும் பொறுத்தது. இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அது, சூழலை-யும், பழக்கத்தையும், இடத்தையும் கிடைக்கின்ற தன்-மையையும், காலத்தையும், பருவத்தையும், அவரவர் உடல் ஏற்றுக் கொள்கின்ற தன்மையையும், மரபையும் பொறுத்தது.

ஃ உண்ணுகின்ற பொருள்களிலும் குடிக்கின்ற பொருள்களிலும் கடவுள் கொள்கையையும் மதக் கோட்பாடுகளையும் அற-முறைகளையும் பேசுவதும் நடைமுறைப் படுத்துவதும் எப்-பொழுதும் எல்லா இடத்திலும் வெற்றி பெறாது. மதுவைக் குடிப்பதும் குடிக்காததும் தனி மாந்தக் கோட்பாடு; தனிப் பட்ட நடை முறை ஒழுங்கு; அதுவும் பழக்கத்தை அடிப்படை-யாகக் கொண்டது. அதைச் சட்டமிட்டுத் தடுக்க முடியாது. ஆனால் மதுவருந்துபவர்களைப் பொதுவொழுங்கிற்கு ஊறு-பாடாக நடந்து கொள்ளாதவாறு மட்டுமே சட்டத்தால் தடுக்கலாம். (தொடர்ச்சி அடுத்த பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

கலைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடத்த இயலாது. எனினும், இவ்வகையில் நான் முனைப்புடன் செயல்படுவேன்'' என்று உறுதியளித்தார். துணைவேந்தர் அவ்வாறே செயல்பட்டதாக-வும், அப்போதிருந்த அ. தி. மு. க. அரசு தமிழில் பொறியியல் பாடங்கள் நடத்துவதற்கு ஒப்புக்கொள்ள மறுத்ததாகவும், துணைவேந்தர் வ. ஐ. சுப்பிரமணியன் அவர்கள் தம் பதவிக்-காலம் முடிவதற்குள் இடையிலேயே 1985-இல் பதவி விலகியதற்-குரிய பல காரணங்களுள் இதுவே தலையானது என்றும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பேசிக் கொண்டார்கள்.

—பேரா. பி. விருத்தாசலம்

நூல்: என்று தணியும் எங்கள் அடிமையின் மோகம்

- மதுவிலக்கு உலகில் எந்த நாட்டிலும் அரசியல் சட்டத்தால் தடுக்கப் பெறவில்லை; ஒழுங்கு படுத்தப்படுதல் மட்டுமே செய்யப் பெற்றிருக்கிறது.
- மது அருந்துவது தமிழக அரசியலில் கழகக்காலம் தொட்டு, எந்த அரசனின் ஆட்சிக் காலத்திலும் தடை செய்யப் பெற்றதாக வரலாறு இல்லை.
- மது அருந்துவதை அறநூல், சமய நூல் ஆசிரியர்கள் மட்டுமே கண்டித்திருக்கிறார்கள்.
- மது அருந்துவதைச் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் மட்டுமே கடிந்திருக்கின்றன. வேத சமயமாகிய இந்து சமயம் அதைத் தடுக்கவில்லை. வேதங்களிலும் மது அருந்துவது ஒரு "யாக" நடை முறையாகவே கூறப் பெற்றிருக்கின்றது. "யாகம்" செய்வதில் மது அருந்துவதும், புலால் உண்ணுவதும் பொது நடைமுறைகளாகவே கொள்ளப் பெற்றிருக்கின்றன. வேத காலத்தில் பெண்களும் மதுவருந்தியிருக்கின்றனர்.
- இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் வரும் தசரதன், இராமன், கோசலை, கைகேயி, சுமத்திரை, இராமன், சீதை, இலக்குவன் முதலியவர்களும். பஞ்சபாண்டவர்களும், துரியோதனன் முதலியவர்களும் மது அருந்தியவர்களே!
- கழகக் காலப் புலவர்களில் பெரும்பாலாரும், அரசர்களும் மது அருந்துபவர்களே!
- இன்றைய ஆரியப் பார்ப்பனர்கள் (பிராமணர்கள்) மதுக் குடிப்பை எதிர்ப்பது, மதுக் குடிக்கும் பிற தமிழ (சூத்திர, வைசிய, சத்திரிய)ச் சாதியினரால் தாங்கள் கேடுகள் அடையக்கூடாது என்பதற்காகவும் அதற்காக அஞ்சியுமே ஆகும்.
- மது வகைகளில் எரிசாராயம் குடிப்பதே பல வகையிலும் கேடு பயப்பதாகும். பனை, தென்னை, ஈந்து முதலிய மரங்களில் வடியும் பாளைச்சாறு (கள், மது) எவ்வகையிலும் கேடு பயப்பன அல்ல. மாறாக உடல் நலத்திற்கு மிகவும் உதவுவன ஆகும்.
- அளவுக்கு மீறாத வகையில், தூய்மையாகக் கிடைப்பதானால் அவற்றை உழைக்கும் மக்களும். நோய்வாய்ப்பட்டவர்களும் நாள்தோறும் உண்ணலாம்.
- மாம்பழம், செந்தாழை (அன்னாசி), கொடி முந்திரி, முந்திரி, முதலிய பழங்களின் சாறும் மது வகையினதே!
- பால் குடிப்பதும், மோர் குடிப்பதும், தேன் அருந்துவதும் கருப்பஞ்சாறு, தேங்காய் பால்-இவற்றை மிகுதியாக அருந்துவதும் மதி மயக்கத்தைத் தரும் மதுக் குடிப்பே;

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார். (922)

செய்தித்தாள் அறிக்கை:

பாவேந்தர் நூற்றாண்டு விழா உயர்நெறிக் குழுவிலிருந்து பாவலரேறு பெருஞ்சித்திரனார் விலகுகிறார்!

பாவேந்தர் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக, அரசு 45 அறிஞர்களைக் கொண்ட ஓர் உயர் மட்டக் குழுவை ஓராண்டுச் செயல் பாட்டிற்கென அமைத்திருந்தது. அக்குழுவில், உலகத் தமிழின முன்னேற்றக்கழக முதல்வரும், தென்மொழி, தமிழ்நிலம் இதழ்களின் ஆசிரியரும் ஆகிய பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் ஒருவர்.

அரசு அமைத்த அந்தக் குழுவிலிருந்து இப்பொழுது, பாவலரேறு பெருஞ்சித்திரனார் விலகிக் கொள்கிறார் என்று அவர் அண்மையில் செய்தித்தாள்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அவருடைய அறிக்கையில், அக்குழுவிலிருந்து தாம் விலகுவதற்குரிய காரணங்களாக அவர் பின்வரும் கருத்துகளை வெளிப்படுத்திக் கூறியிருப்பதாவது:

(1) பாவேந்தர் நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப் பெற்ற உயர்நிலைக்குழு கடந்த 8-4-90 அன்று ஒரு முறை கூடியதுடன் சரி. அதற்குமேல் இன்று வரை அக்குழு கூட்டப்பெறவே இல்லை. எனவே, இதுவும் பொதுமக்களை ஏமாற்ற, ஒரு கண்துடைப்புக்காக அரசு அமைக்கும் பல குழுக்களைப் போலவே, அமைக்கப் பெற்ற ஒரு குழுதான் என்பது தெளிவாகிறது.

(2) இக்குழு முதன் முறை கூட்டப்பெற்று, இதன் ஒரு பகுதி உறுப்பினர்களால் கொடுக்கப் பெற்ற, ஏறத்தாழ நூற்றைம்பது கருத்துகளில், ஏதோ இரண்டு மூன்று கருத்துகளை மட்டுமே அரசு செயலுக்காக எடுத்துக் கொண்டது. அது செயலுக்கு எடுத்துக் கொண்ட பத்தொன்பது கருத்துகளும் பொதுவான விழா வேடிக்கைகளை உள்ளடங்கியவையே! உறுப்படியான செயல்பாடுகள் பெரும்பாலும் இல்லை.

இந்நிலையில் இக்குழுவின் தேவையோ, அதன் பணியோ மதிக்கப் பெறவில்லை என்றே முடிவு செய்யவேண்டியுள்ளது. இது இக்குழுவிலுள்ள அறிஞர்களை அரசு அவமதிக்க செயலாகும்.

(3) அடுத்து, இக்குழு அமைக்கப்பெற்ற பின், அரசு நடத்திய இரண்டு மூன்று பாவேந்தர் விழாக்களில் இக்குழுவின் அறிஞர்கள் அழைக்கப்பெறவில்லை. வெறும் விழா அழைப்பு மட்டுமே, பொதுவாக எல்லாருக்கும் விடுப்பதுபோல் அனுப்பப் பெற்றிருந்தது.

(4) அத்துடன், அரசு வழங்கிய பாவேந்தர் விருதுக்கான தகுதியாளர்கள் இக்குழு உறுப்பினர்களால் பரிந்துரைக்கவோ

தேர்ந்தெடுக்கவோ பெறவில்லை. அரசின் தலைவராலும் அவரைச் சார்ந்த அதிகாரிகள் சிலராலுமே தங்கள் விருப்பமாக—தாறுமாறாக—தகுதியற்ற நிலையில், தேர்ந்தெடுக்கப் பெற்று பரிசுகள் வழங்கப் பெற்றிருக்கின்றனர். இந்தச் செயல்களும அறிஞர் குழுவை முழுவதுமாகப் புறக்கணித்த அல்லது அவமதித்த செயல்களாகும்.

(5) நூற்றாண்டு விழாவைப் பொதுவான ஆண்டு விழாப் போலவே—அதுவும் தங்களுக்குப் பெருமை சேர்த்துக் கொள்ளும் விழாவாகவே கொண்டாடுவதற்கு அரசு விரும்புகிறதே யொழிய, பாவேந்தருக்குப் பெருமை சேர்ப்பதற்காகவோ, அவருடைய கருத்துகளைப் பரப்ப வேண்டுமென்கிற நோக்கத்திடனோ அரசு கொண்டாட விரும்பவில்லை என்று தெரிகிறது.

(6) பாவேந்தரின் தனிச் சிறப்பான கொள்கை தமிழை வளர்ப்பதும், தமிழால் இனத்தை மேம்பாடுறச் செய்வதும், இனத்தால் நாட்டுரிமைகளை மீட்பதும் அவற்றை நிலைபெறச் செய்வதுமே ஆகும். இக்கொள்கைகளில் எந்த ஒன்றையுமே கடைப்பிடிக்காமல் வெறும் விழா வேடிக்கைகளை மட்டுமே நடத்துவதால் அவரின் நூற்றாண்டு விழாக் கொண்டாவதற்குப் பெருமையுமில்லை; சிறப்புமில்லை. இவ்வகையான அரசின் போலிச் செயல்களுக்கு நாம் துணை போக விரும்பவில்லை.

(7) மேலும், பாவேந்தரின் கொள்கைகளில், கொடுமுடியாய் விளங்குவது தலையாயது அவரின் தமிழ்வழிக் கல்வி என்னும கோட்பாடேயாகும். அவரின் நூற்றாண்டு விழா ஆண்டிலிருந்தாவது, தமிழ் வழிக் கல்வியை அரசு கடைப்பிடிக்க முயற்சி செய்யாததுடன், அதற்கு எதிராக, ஆங்கில வழிக் கல்விக்கே மேலும் மேலும் வழியமைத்துக் கொடுக்கும் தமிழக அரசின் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

இவ்வேழு வெளிப்படையான காரணங்களுக்காகவும், இங்குக் கூறவிரும்பாத வேறு சில மறைமுகக் காரணங்களுக்காகவும், நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தன்மானப் பேராசிரியர்களும், தமிழ்மானக் கொள்கையாளர்களும், தாழாத இனமானப் போராளிகளும் ஆகிய தமிழ்மானத் திருவாளர்கள் சாலை இளந்திரையனார், சாலினி இளந்திரையனார் ஆகியோரின் வேண்டுகோளுக்கு ஏற்பவும், அரசு அமர்த்திய 'பாவேந்தர் நூற்றாண்டுவிழா உயர்நிலைக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளுகிறேன் என்று அரசுக்கும், பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார்
முதல்வர், உலகத்தமிழின முன்னேற்றக் கழகம்,
ஆசிரியர்: தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு.

சென்னை-600-005.
21—8—90.

முன்னிதழ் ஆசிரியவுரைத் தொடர்ச்சி:

பாவேந்தர் நூற்றாண்டு!

இந் நிலைகளைக்கூட இங்கு ஏன் குறிப்பிடுகின்றோம் என்றால், நம் மக்கள் பாரதியாரைத் தெரிந்து கொண்ட அளவிற்குப் பாவேந்தரைத் தெரிந்து கொள்ளாமல், பார்ப்பனர்கள் இருட்டடிப்புச் செய்து விட்டனரே என்னும் ஆற்றாமையிலும், தமிழர்கள் இதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்னும் அக்கறையிலும் தாம்!

இந்தச் சூழ் நிலையில் நாமும் அஃதாவது தமிழர்களாகிய நாமும், நம் அரசும் அஃதாவது தமிழுக்காக இருப்பதாகச் சில நேரங்களில் கூறிப் பெருமைப் பட்டுக் கொள்ளும் கலைஞர் அரசும், இப் பாவேந்தரின் நூற்றாண்டு விழாவை எந்த அளவு பெருமையாகவும் பொருள் பொதிந்த வகையிலும் சீரோடும் சிறப்போடும் கொண்டாட வேண்டும் என்பதுபற்றி ஓரளவு கருதிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்.

தமிழக அரசு இந்நூற்றாண்டு விழாவை எந்த வகையில் கொண்டாடுவது என்பதைத் திட்டமிடுவதற்காக உயர்நிலைக்குழு என்னும் பெயரால் ஓர் அறிஞர் குழுவை அமர்த்தியது. இக் குழு அமர்த்தம் என்பதே கலைஞர் தமக்கு உகந்தவர்களாகக் கருதுகின்ற சிலரை ஏதோ ஒரு வகையில் நிறைவு செய்ய வேண்டும் என்பதற்காக அமைந்ததோ என்று எண்ணும் அளவுக்கு இருந்தது. இதை விட அந்தக் குழுவில் நம்மையும் ஓர் உறுப்பினராகச் சேர்க்கப் பெற்றிருந்ததுதான் நமக்கு வியப்பினும் வியப்பாகவும், ஏன், அதிர்ச்சியாகவும்கூட இருந்தது. ஏனெனில் அந்த அளவுக்கு நம்மை அவர் என்றுமே பொருட்படுத்தியதில்லை. இன்னுஞ் சொன்னால், என்றுமே, எதற்குமே அவர் நம்மைப் பாராட்டிக் கொண்டதுமில்லை. அதற்குக்காரணம் தனிப்பட்ட முறையில் நாம் அவருக்கு என்றுமே பயன்பட மாட்டோம் என்பதுதான்! இஃதொரு புறம் இருக்கட்டும்.

கலைஞர் அரசு பாவேந்தர் நூற்றாண்டு விழாவை ஒட்டி அமைத்த உயர்நிலைக் குழுவில் அவர் தலைவர்; உறுப்பினர்களாக, மாண்புமிகு கல்வி அமைச்சர், குமுகநலத்துறை அமைச்சர், செய்தி, தொழிலாளர் துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர்களான எசு. ஆர். இராதா, குமரி அனந்தன், கி. ஆ. பெ., புலவர். கோவிந்தன, தவத்திரு. குன்றக்குடி அடிகளார், கி. வீரமணி, மன்னை நாராயணசாமி, மன்னர் மன்னன் (பாவேந்தர் மகன்), திருவாட்டி செயந்தி (செயலர் செய்தி, மற்றும் சுற்றுலாத்துறை), ஔவை. நடராசன், (செயலர். தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத்துறை), வ. செ. குழந்தைசாமி (முன்னாள் துணைவேந்தர், அண்ணா பல்கலைக் கழகம்), சி. பாலசுப்பிரமணியம் (துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்), முத்துக்குமரன் (துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்) சிவாசி கணேசன், மா. நன்னன், அப்துல் இரகுமான், அரசு மணிமேகலை, மா. செல்வராசன், நாக நாதன், பொன்னி வளவன், சுரதா,

முடியரசன், வைரமுத்து, பொன்னடியான், சிவகாம சுந்தரி, நிர்மலா சுரேசு, பு. பா. இராச இராசேசுவரி, சிலம்பொலி செல்லப்பன், தமிழண்ணல், க. ப. அறவாணன், பா. வளனரசு, த. முருகு சுந்தரம், மருதவாணன், அர்ச்சுனன், கோவை. இளஞ்சேரன், அரிமதி தென்னகன், புலமைப் பித்தன் ஆகியோருடன் நாமும் உறுப்பினர்கள்.

உயர் நிலைக் குழுவின் முதற் கூட்டம் 8-4-90 அன்று மாலை 5 மணி முதல் 7-30 வரை கலைஞர் தலைமையில், தலைமைச் செயலகத்தில் நடைப்பெற்றது. இக் கூட்டம் மிகவும் முகாமையானதாக நாம் கருதினோம். ஏனெனில் இதில் தீர்மானிக்கப் பெறுகிற கருத்துகளை வைத்துத்தான் பாவேந்தர் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற விருப்பதும், இருக்காததும். ஆனால் இக் கூட்டத்திற்கே, 41 குழுவின் உறுப்பினர்களில் 11 பேர்கள் வரவில்லை.

இனி, வந்திருந்த 30 பேர்களில், தலைவர், கல்வியமைச்சர் ஆகிய இருவரும் முன்னுரை, முடிவுரையாகக் கூறியவை போக, எஞ்சிய 28 பேர்களில் மூவர் அமைச்சரும் அதிகாரிகளும். ஆகையால், 25 பேர்களே பலவேறு கருத்துகளை முன் வைத்தனர். இவர்கள் தலைக்கு, சரி நிகராக, ஐந்து, ஆறு கருத்துகளையேனும் கூறியிருப்பதாக வைத்துக் கொண்டாலும், ஏறத்தாழ 150 கருத்துகளை அங்குக் கூறியிருந்தார்கள் என்று கொள்ளலாம். அவற்றுள் பிறர் அனைவரும் ஓர் அறிஞருக்கான விழாவை எவ்வாறு பொதுவாகக் கொண்டாடி வருகிறோமோ, அஃதாவது, நூல்களைப் பொதுவுடைமையாக்குதல், அஞ்சல்தலை வெளியிடுதல், விழா எடுத்தல், பாட்டரங்கம், பட்டிமன்றம், பரிசளிப்பு முதலிய வகையில் கொண்டாடுதல் — போன்ற கருத்துகளையே பரிந்துரைந்தனர். நாம் பாவேந்தருக்கு விழா வெடுப்பது பற்றி 1966-இலேயே (தென்மொழி — சுவடி 4-ஓலை 4-இலேயே) கீழ்வருமாறு கருத்தறிவித்துள்ளோம்.

''இன்று தமிழர்களின் நெஞ்சங்கள் அடிமைப்பட்டுக் கிடக்கின்றன: அவர் தம் மூளைத்திரளையுள் இருள் மண்டிக் கிடக்கின்றது; அவர் தம் முதுகெலும்பு கோணியுள்ளது; அவரின் கைகள் கட்டப் பெற்றும், கால்கள் மண்டியிடப் பெற்றும் கிடக்கின்றன. (அவர் பாடல்களைப் படித்த) சிலராகிலும் இது பற்றிக் கவலைப் பட்டிருக்க வேண்டும். ஒரு சிலராவது அவர் பாடல் வரிகளுக்குப் பொருள் எழுதியிருக்க வேண்டும். அந்நிலை எழாத வரை, பாரதிதாசனுக்கு நினைவு மலர்கள் வெளியிட்டுப் பயனில்லை; நினைவு விழாக்கள் கொண்டாடிப் பயனில்லை; அஞ்சல்தலை வெளியிட்டுப் பயனில்லை; எல்லாம் வெறும் ஆரவாரம்! வயிற்றுச் சோற்றுக்கும் சட்டைப் பைக்கும் வகை தேடும் வழிமுறைகள்'' என்பன அதில் கூறப்பெற்றிருந்த கருத்துகள்!

எனவே, முதல்வர் கூட்டிய பாவேந்தர் நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் அரசு செய்ய வேண்டிய — மிகவும் முகாமையான கருத்துகளாகச் சிலவற்றை அடியில் வருமாறு முன்

வைத்தோம். அதற்கு முன் கலைஞரை விளித்து, "நாம் கூறப்புகும் கருத்துகள் சற்று தீவிரமானவை. எனினும், இவ் வரசும் கலைஞ-ரும் அவற்றைச் செயற்படுத்தியே ஆக வேண்டும். அவை இத் தமிழினத்திற்கு நல்லது. அதன் முன்னேற்றத்திற்கு அடிப்படை-யானவை. நம் அரசுக்கு மீண்டும் இவ்வாறானதொரு வாய்ப்பு கிடைக்காமற் போகலாம். அதனால் கட்டாயம் இப் பாவேந்தர் நூற்றாண்டு விழாவை முன் வைத்தேனும் இவற்றைச் செயற் படுத்திக் கொள்வது நல்லது"—என்று முன்னுரையாகக் கூறிக் கீழ் வரும் எட்டுக் கருத்துகளையும் குழு முன்னர் எடுத்து வைத்து அவற்றைச் செயல் படுத்துமாறு அரசைக் கேட்டுக் கொண்டோம்.

1) முதலில், புதுவை மாநிலத்தைப் பாவேந்தர் மாநிலம் என்று பெயரிட முயற்சி எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இதற்குப் புதுவை அரசும், நம் அரசும் தி.மு.க. அரசாக இருப்பதால், இரண்டு அரசும் சேர்ந்து நடுவணரசைக்கேட்டுச் செயற்படுத்தி—டல் எளிது. இதை நாம் செய்யத் தவறினால், எதிர்காலத்தில் வடவர்கள் அதை அரவிந்தர் மாநிலம் என்று ஆக்கினாலும் வியப்பதற்கில்லை.

2) அடுத்து, இரண்டாவதாக, திருவள்ளுவர் கோட்டம் போல், சென்னையிலிருந்து மாமல்லபுரம் போகும் வழியிலோ வேறு நல்ல முகாமைப் பகுதியிலோ, பாவேந்தர் கோட்டம் ஒன்று அமைத்து, அதில் பாவேந்தரின் தேர்ந்த நூறு தமிழ், இனவுணர்வுப் பாடல்-களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் கல்லில் பொறிக்க வேண்டும். அதில் பாவேந்தர் தொடர்பான நினைவு எச்சங்கள் (சின்னங்கள்) அனைத்தும் வைக்கப் பெறுதல் வேண்டும். அவருடைய முழு அளவுச் சிலையும் அதில் வைக்கப் பெறுதல் வேணடும்.

3) சென்னை கடற்கரையில் பாவேந்தர் சிலைக்குப் பின்னர் 'பாவேந்தர் நூற்றாண்டு நினைவு மண்டபம் அல்லது நினைவு மாளிகை ஒன்று' நான்கு அல்லது ஐந்து அடுக்குகளில் அமைத்து, அதன் மேலே உயரமான சுழல் விடுதியும், கீழ்மாடிகளில் வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், பார்வையாளர்களும் வந்து தங்கியும் மகிழ்ந்தும் போவதற்குரிய வகையில் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், பூங்காக்கள், நீச்சல் குளம், வாவிகள் முதலிய-வற்றை பெருத்த வருமானத்திற்குரியனவாகவும் அமைத்தல் வேண்டும். ஒரு மாடி முழுவதையும் பெரிய சொற்பொழிவு மண்டபமாக அமைத்து வாடகைக்கு விடலாம்.

4) பாவேந்தரின் பாடல்கள், நாடகங்கள், உரைகள், கதைகள் ஆகிய அனைத்தையும் முழுமையாகத் தொகுத்து பைபிள் முதலிய உயரிய நூல்கள் அச்சிடுவதைப்போல் மிகவும் மெல்லிய தாளில் அச்சிட்டு, அதை அடக்க விலைக்கோ மலிவு விலைக்கோ கொடுக்க-லாம், அதனால் அரசுக்கான செலவையும் திரும்பப் பெற்று விடலாம்.

5) பாவேந்தருக்கு அஞ்சல் தலை வெளியிடும்படி நடுவணரசை வற்புறுத்துதல் வேண்டும். (இக் கோரிக்கையைப் பெரும்பாலும் அங்கு வந்திருந்தவர் அனைவருமே வலியுறுத்தினர்).

6) பாவேந்தர் நூல்கள் அனைத்தையும் மொழிபெயர்ப்புக் குழு ஒன்று அமைத்து, ஆங்கிலம், இந்தி மொழிகளிலும், தென்னாட்டுத் திராவிடமொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய மொழிகளிலும், வடநாட்டு மொழிகளான வங்காளம், குசராத்தி, மராட்டி போன்ற மொழிகளிலும் வெளியிட வேண்டும்

7) பாவேந்தர் நூல்களைப் பொதுவுடைமை (அரசுடைமை அன்று) ஆக்குதல் வேண்டும். (அப்பொழுதுதான் பொது மக்கள் அப் பாடல்களைத் தாங்களாகவே அச்சிட்டுப் பரப்புதற்கு வாய்ப்பு ஏற்படும்.) இதற்காகப் பாவேந்தர் குடும்பத்திற்கு அதற்குரிய ஒரு தொகையை உறுதி செய்து வழங்குதல் வேண்டும்.

8) இறுதியாக, இப்பொழுது தமிழக அரசு தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பாடலான 'நீராருங்கடலுடுத்த' என்னும் பாடல் சிறுவர்களுக்கும், ஏன் பெரியவர்களுக்கும் கூட சரியாகப் பொருள் விளங்காததாக உள்ளது. மேலும் அதில் குறிப்பிடப் பெற்றுள்ள 'திராவிடம்' என்னும் சொல் இன்றைய நிலையில் பொருந்துகின்ற பொருளைத் தரவில்லை. அவை தவிர, அது தூய தமிழ்த்தாய் வாழ்த்தாகவும் இருக்கவில்லை; அதில் பல வட சொற்கள் கலந்துள்ளன. அத்துடன் அதில் உள்ள உயிரான ஒரு வரியை வேறு எடுத்துவிட்டதால் அப் பாடல் உயிரற்று இயங்குகிறது. எனவே, அப் பாடலைத் தவிர்த்து விட்டுப் பாவேந்தரின் 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்னும் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாகப் பாடுதற்கு அரசு கட்டளை இடுதல் வேண்டும்.

(அம் முழுப் பாடல் பின்வருமாறு)

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே!
மாண்புகள் நீயே! என்தமிழ்த் தாயே!
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே!
வீரரின் வீரமும் வெற்றியும் நீயே!

தாழ்ந்திடு நிலையில் உனைவிடுப் பேனோ
தமிழன்எந் நாளும் தலைகுனி வேனோ?
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீ! உயிர் நான்! மறப் பேனோ?

செந்தமிழே! உயிரே! நறுந் தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தாய் எனில் நைந்து போகுமென் வாழ்வு!
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே!

முந்திய நாளினில் அறிவும் இலாது
மொய்த்தநன் மாந்தராம் புதுப்புனல் மீது
செந்தாமரைக் காடு பூத்தது போல
செழித்த என் தமிழே, ஒளியே வாழி!

இவ்வெட்டுக் கோரிக்கைகளையும் நம் கோரிக்கைகளாக அரசு முன்னர் வைத்து, அடுத்த முறை நாம் மீண்டும் ஆட்சியமைக்க நமக்கு வாய்ப்பு கிட்டுகிறதோ இல்லையோ, இப்பொழுதுள்ள ஆட்சியிலேயே இவற்றைச் செயல்படுத்தி விடுதல் நமக்கும் நம் இனத்திற்கும் மிகவும் நல்லது. எதிர்காலத் தமிழர் தொடர்ந்து இனநலனைக் காத்துக் கொள்ள இவ்வெட்டுச் செயலாக்கங்களும் பெருந்துணையாக என்றென்றும் நிலையாக இருக்கும். ஆகவே பெரும்பான்மை உலகத் தமிழர்களுக்கு ஒரு நம்பிக்கையாகவும், உலகத் தமிழினத் தலைவர் எனப் பெயர் பெற்றிருக்கும் ஒருவராகவும் உள்ள கலைஞர் இவற்றைச் செய்தே ஆக வேண்டும் என்றும் இறுதியாகவும் உறுதியாகவும் வலியுறுத்துகிறேன்''—என்று வலியுறுத்திப் பேசினோம். நம் இக் கருத்துகளை, அவரவர்களுக்குப் பேச வாய்ப்பு வந்த போது, மதிப்பிற்குரிய சுரதா, கோவை இளஞ்சேரன் போன்றவர்களும் ஆதரித்தும் பேசினர்.

ஆனால், அனைவரும் தம் தம் கருத்துகளைக் கூறிய பின்னர், முடிவுரை கூறிய கல்வியமைச்சர் பேரா. அன்பழகன், குறிப்பாகவும் மறைமுகமாகவும், நாம் கூறிய கருத்துகளைச் சுட்டிப் பேசும் முறையில் ''அரசு பாவேந்தர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுதற்குரிய கருத்துகளைக் கூறுங்கள் என்று கேட்டுக் கொண்டால், இங்கு அவர் விழாவை நூறு ஆண்டுகள் கொண்டாடுதற்குரிய கருத்துகளாக முன் வைக்கிறார்கள்'' என்று கிண்டலாகவும், அதே பொழுது இயலாததாகவும். அங்கிருந்தவர்களின் மண்டையில் அடிக்குமாறும் கூறினார். அவர் அவ்வாறு உண்மையிலேயே கூறியிருந்தால், அது நம் மண்டையிலன்று தமிழர்களின் மண்டையில் அடித்த அடியாகும் என்பதைப் பேராசிரியர் அவர்களுக்கு உணர்த்திக் கூற விரும்புகிறோம்.

இந்த முதல் கூட்டத்திற்குப் பின்னர், அரசு பெயருக்கு அமைத்த உயர் நெறிக் குழுவின் அடுத்த கூட்டம் இன்று வரை நடை பெறவே இல்லை. ஆனால், கடந்த ஏப்பிரல் இறுதியில், அரசு இந் நூற்றாண்டு விழாத் தொடர்பாக எடுத்த 19 முடிவுகளையும் அதன் உயர் நிலைக் குழுவினர்க்கு அனுப்பியிருந்தது. அம் முடிவுகளில் ஒன்று கூட நிலையான பயனைத்தருவதாக அமையாதது பெரிதும் வருந்தத்தக்கதாக இருந்தது.

அவை வெறும் விழா நிகழ்ச்சிகள், 10 பேர்களுக்கு 'விருது' வழங்குதல், மலர் வெளியிடுதல், பாவேந்தர் சிலை நிறுவுதல், 100 இளம் பாவலர்களுக்குப் பரிசு வழங்குதல், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் நூற்றாண்டு விழாவை ஒரு நாள் கொண்டாடச் செய்தல், வரும் ஆண்டில் பாவேந்தரின் பாடல்களைப் பள்ளிப் பாடங்களில் இடம் பெறச் செய்தல், பாவேந்தர் நூல்களை ஆய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்களைப் பாராட்டுதல், மாவட்டந்தோறும் விழாக் கொண்டாடச் செய்தல், பாவேந்தர் நினைவு அஞ்சல் தலையை வெளியிடச்

செய்தல், பிஜி, மொரீசியசு தீவுகளில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பாவேந்தர் நினைவாலயம் ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளுதல், பாவேந்தர் நூல்களை அரசுடைமையாக்குதல், பாவேந்தர் எண்ணங்களை கருத்துகளை வெளியிட ஆவன செய்தல், கண்காட்சி ஒன்றிற்கு ஏற்பாடு செய்தல், பாவேந்தரின் 100 பாடல்களையாவது தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிட யார் முன் வந்தாலும் அரசு அவர்களுக்கு உதவுதல், பாவேந்தர் நூற்றாண்டு விழாவோடு ஒத்துவருமானால் உலகத் தமிழ் மாநாட்டை நடத்துதல், கருநாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் நூற்றாண்டு விழாவை நடத்த ஏற்பாடு செய்தல் முதலியவையாகும்.

இவற்றின்படி கடந்த 6-5-90-இல் பாரதிதாசன் பல்கலைக் கழக வளாகத்தில் (திருச்சி, பல்கலைப் பேரூரில்) பாவேந்தரின் முழுவுருவ வெண்கலச் சிலையைக் கலைஞர் அவர்களைக் கொண்டு, பல்கலைக் கழகம் திறந்து விழாக் கொண்டாடியது. இந்த நிகழ்ச்சியிலேயே பாவலர்கள் சிலர்க்குப் பாரதிதாசன் விருது வழங்கப் பெற்ற நிகழ்ச்சியும் நடைபெற்றது.

எதைச் செய்தாலும், எவர்க்காகச் செய்தாலும் இப்பொழுதுள்ள தி. மு. க. அரசுக்கும் அமைச்சர்களுக்கும் விளம்பரம், பெருமை, புகழ், பொருள் ஊதியங்கள் கிடைத்தல் வேண்டும் என்பது அவர்களின் அடிப்படைக் கொள்கை. இதன் அடிப்படையிலேயே பாவேந்தர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை அது திட்டமிட்டுக் கொண்டாடி வருகிறது. இந்த வகையில் வேறு எவருடைய கருத்துகளையும் அவர்கள் செவிமடுப்பதில்லை. ஆனால், அவ்வாறு மக்கள் கருதி விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே, அது சிற்சில குழுக்களை அமர்த்துவதாகவும், அவர்களின் கருத்துகளைக் கேட்பதாகவும் நடித்துக் காட்டுகிறது. அந்நாடகத்திற்கேற்ற உறுப்பினர்களாகவே அது பாவேந்தர் நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழு ஒன்றை பெயருக்கு அமைத்தது. ஆனால் அக் குழுவிற்கும், அரசின் செயற்பாடுகளுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை என்பது, அரசு கொடுத்த பாரதிதாசன் விருது பெறத் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஆட்களைப் பார்த்தாலே உண்மை விளங்கி விடும். அவர்களில் பலர்க்குப் பாடல் என்றால் என்னவென்று தெரியுமா என்பதே ஐயம்! பலர் பாவேந்தர் பாடல்களைச் சிலவற்றையாகிலும் பார்த்திருப்பார்கள் என்பதும் ஐயமே! எப்படியோ, அரசன் முத்திரால் அரம்பை' என்னும் பழமொழிக்கேற்ப, கலைஞர் அரசு பாவேந்தர் பரம்பரைப் பாவலர்கள் என்னும் அரச முத்திரையைத் தாம் விரும்பும், தமக்குகந்த சிலர் மேல் குத்திப் பொது மக்களுக்கு அவர்களை அடையாளம் காட்டியிருக்கிறது. அந்த வகையிலாகிலும் நம் 'அரசின்—கலைஞரின்—கடைக்கண் பார்வைக்கு உள்ளாகிய கலைஞர்களுக்கு நாமும் நம் வாழ்த்துகளைச் சொல்வதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை'

அப்பாத்துரையார் குடும்ப நலக் கொடை!

பட்டியல்-3

ஆசிரியரின் அன்பு வேண்டுகோளுக்கு இசைந்து பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்களின் குடும்பத்துக்கு உதவிய தூய தமிழ் நன்னெஞ்சங்கள்:

(26-4-90 முதல் 19-7-90 முடிய)

		உருபா
112.	ந. முனுசாமி, வெங்காலூர்-60 (இரண்டாம் முறை)	50
113.	ந. உமாபதி, காரைக்குடி	100
114.	ஓடவை. ந. தமிழ்வேந்தன், ஒட்டன் சத்திரம்	25
115.	பேரா. சாலை, இளந்திரையன், சென்னை—86 (நான்காம் முறை—மே 90)	100
116.	அன்புக்கண், சிதம்பரனார் மா.வ	20
117.	ஆர், பி. சந்திரன். ஐதராபாது	25
118.	பைந்தமிழ்ப் பாசறை, அசோக்இலேலண்டு, எண்ணூர் (4-5-90 அன்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் நடந்த வாயில் கூட்டத்தில் திருவாட்டி அலர்மேலு அப்பாத்துரையார் அவர்களிடம் நேரில் கொடுக்கப்பெற்றது. விரிவான செய்திகள் தனியே)	2200
119.	பசுமலையரசு. வெங்காலூர்	100
120.	சி. பூ. மணி ,,	100
	நிலா. வேங்கடவன்.கோபி செட்டிபாளையம் அவர்கள் திரட்டி விடுத்த தொகை விளக்கம்(வரிசை எண் 148முடிய)	
121.	நடேசன், நகரவங்கி, கோபி செட்டி பாளையம்	10
122.	இராமசாமி. நுண்ணலை ,,	10
123.	நாராயாணன். சித்திர தையலகம் ,,	5
124.	ச கண்ணப்பன், மதுரை வங்கி ,,	21
125.	மெ. சோமசுந்தரம் ,, ,,	21
126.	இனியரசு மின்வாரியம் ,,	10
127.	அரச மாணிக்கம், பள்ளக்காட்டுத்தோட்டம் வள்ளிபுரம்	25
128.	செம்மலை, நுண்ணலை, கோபி செட்டி பாளையம்	10
129.	த. துரைராசு, மின்வாரியம் ,,	10
130.	பு. கு. பழனிச்சாமி, தேவி மருந்தகம்,,	50
131.	லோகநாதன், நுண்ணலை ,,	5
132.	க. ப. வேலுச்சாமி, கரட்டடிப்பாளையம்	10
133.	சி, அய்யம் பெருமாள்	25
134.	தனசேகரன் சந்திரா மருந்தகம் கோபிசெட்டி பாளையம்	10
135.	வெ, இரா: சந்திரசேகரன் பவளமலை ,,	50
136.	பொ: சிவகுமார், காசிபாளையம்	50

137.	ஆர். அத்தப்பன், அரசு மருத்துவமனை ,,	10
138.	கே. எசு. பால்கிருட்டிணன், அ.ம.ம. ,,	10
139.	ஆர். இலக்குமணன், அ.ம.ம, ,,	10
140.	இராசேந்திரன், நுண்ணலை, ,,	10
141.	கருப்பையா, மேலாளர், மதுரை வங்கி ,,	100
142.	பண்டாரகர். பேரா. அரங்கசாமி தமிழ்த்துறைத் தலைவர், கோபி கலைக்கல்லூரி	100
143.	வே. அறிவுமலர், சிலம்பகம், கோபிசெட்டிபாளையம்	25
144.	சிலம்புச்செல்வி ,,	25
145.	ச. அன்புமலர், நிலாத்தோட்டம், கத்தூரி கம்மம்	10
146.	கா. தேவநிலவன், கத்தூரிபா கம்மம்	10
147.	கா. அழகுமலர், நிலா இல்லம் அரச்சலூர் (வழி)	8
148.	வே. எழிற்கோ செந்தணல், கோபிசெட்டிபாளையம்	10
149.	நா. அரங்கநாதன், காவேரிப்பாக்கம்	340
150.	ந. முனுசாமி, வெங்காலூர் (மூன்றும் முறை)	50
151.	புலவர். சுந்தரராசன் மதுரை	20
152.	மயிலைநாதன் சென்னை-28	25
153.	தமிழ்நெஞ்சன் துறையூர் (இரண்டாம் முறை)	50
154.	சாலை. இளந்திரையன் சென்னை-86 (5-ஆம் முறை சூன் 90)	100
155.	பொன்னுசாமி ஆவடி	10
156.	துரையரசு குரோம்பேட்டை	20
157.	ஆறுமுகம், குடியற்றம்	100
158.	அரங்கசாமி கோயம்புத்தூர்	100
159.	வேம்பையன், கல்பாக்கம்	20
		4205.
	முந்தைய மொத்தம்	7719.50
	தொகு மொத்தம்	11924.50

தமிழறிஞர் குடும்பத்தைக் காக்கும் தண்டமிழ்ப் பணிக்குத் தோன்றாத் துணையாக நிற்கும் மெய்ம்மைத் தமிழ் நெஞ்சங்களுக்கு எம் நெஞ்சு நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும் உரியவாகுக!

குறிப்பாக, எண்ணூர், அசோக்லேலண்டு பைந்தமிழ்ப் பாசறையும், கோபி செட்டிப் பாளையம் நிலா. வேங்கடவன் அவர்களும், காவேரிப் பாக்கம் நா. அரங்கநாதன் அவர்களும், நன்கொடை திரட்டி விடுத்தமைக்கு நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம் வேண்டுகோளைத் தொடர்ந்து 'முகம்' இதழிலும், 'கவிதை' இதழிலும் அவ்விதழ் ஆசிரியர்கள் அவ்விதழ்களின் வாசகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாக அறிகிறோம். அவர்களுக்கும் நம் நன்றி! ○

முன்னிதழ்த் தொடர்ச்சி: 2

குணாவின் 'ஆசியத்தகவு' (Asiatic Mode)

'ஒரு திறனாய்வு' வழக்கறிஞர்-சோதிப் பிரகாசம்.

இனி, தமிழினத்தின் உரிமை வேட்கைக்கு உறுதுணையாக நிற்கின்ற வகையில், தமிழகத்தின் வரலாறு பற்றி ஒரு தமிழ் மார்க்சியரால் எழுதப்பட்டு இருக்கின்ற நூல் இ'து என்ற முன்னுரையோடு நூலின் கருத்துகளினுள் நுழைவோம்.

இப்படி ஒரு நூலை எழுத வேண்டிய இன்றியமையாமை தமக்கு எப்படி ஏற்பட்டது என்று குணா ஆங்காங்கே எடுத்தியம்பு-கிறார்.

ஆசிய உருவாக்க முறை பற்றிய மார்க்சின் கருத்தாக்கத்-தினை அப்படியே ஏற்றுக்கொண்டு, தொடர்ந்து அதையே வலி-யுறுத்தி வருகிறார்களாம் திரோத்சுகியக் கருத்தாளர்கள்; அவர்-களது கூற்றினை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், மாவோவின் ''புதிய பொதுநாயகம்'' என்ற செயல் திட்டம் இந்தியாவுக்குப் பொருந்தாது என்று ஆகிவிடுமாம். எனவே ஆசியாவைப் பற்றிய மார்க்சின் கருத்துகளில் அடங்கிக் கிடக்கின்ற குறைபாடுகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமாம்.

மாவோ கருத்தாளர்களும் திரோத்சுகிய கருத்தாளர்களும் புரிந்து வருகின்ற அறிவுப் போர் பற்றி இதற்குமேல் குணா எதை-யும் கூறிவிடவில்லை என்பதால், இந்நூலின் தேவை பற்றி இவர் கூறுகின்ற காரணங்களை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை;

ஏனென்றால், வரலாற்று உண்மைகளையும் நிகழ்ச்சிகளையும் வெளிக்கொணர்வதுதான் ஒரு வரலாற்றாளனின் நோக்கமாக இருக்க முடியுமே ஒழிய, ஏதேனும் ஓர் எதிர்காலச் செயல் திட்டத்தினுள் கடந்த கால வரலாற்று உண்மைகளைச் சுருக்கியும் பெருக்கியும் அடைத்துவிட வேண்டும் என்பது ஒரு வரலாற்-றாளன் ஒருவரின் நோக்கமாக இருந்திட முடியாது; அப்படி இருந்தால் அது வரலாற்று ஆயவாகவும் இருக்காது;

எனவே, இந்தியத் துணைக் கண்டத்தில் நிகழ்ந்து வருகின்ற தேசிய இன எழுச்சியும் குணாவினது தமிழின உரிமை வேட்கையுந் தாம் இந்த நூலுக்குக் காரணங்களாக இருந்திட முடியும் என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது;

எனினும் பண்டு நிலவிய ஆசிய உருவாக்க முறை பற்றிய குணாவின் கருத்துகள் இரு கை நீட்டி வரவேற்கத் தகுந்தவை என்பதில் அய்யமில்லை;

முதலாவதாக, ஆசிய உருவாக்க முறை பற்றிய மார்க்சின் கருத்துச் சிதறல்களில் உள்ள குறைபாடுகளாக, குணா பின் வருவனவற்றைச் சுட்டிக் காட்டுகிறார்;

1) மார்க்சு முதலாண்மை உருவாக்க முறை பற்றி மட்டுமே, முழுமையாக ஆய்ந்தார்; இந்தியாவின் கடந்த காலம்

நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை அவர் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவில்லை;

2) இந்தியாவைப் பற்றி ஆங்கிலேய வல்லாண்மைக்காரர்கள் திரட்டிக் கொடுத்த செய்திகளைத் தவிர, வேறு செய்திகள், மார்க்சுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இந்த வகையில் இந்தியாவைப் பற்றிய மார்க்சின் கருத்துகள் குறை-பாடானவை.

3) எனவேதான், இந்தியாவை ஒரே நாடாகவும் ஒரே குமுகாய அமைப்பாகவும் மார்க்சு பார்த்திட நேர்ந்தது. இந்தியா என்பது பலமொழியின மக்களின் நாடுகள் அடங்கிய ஒரு பன்னாட்டுத் தொகுதி என்பது மார்க்சுக்குத் தெரியாது.

மேற்குறித்த கருத்துகளை வலியுறுத்துகின்ற வகையில், குணா ஆழமானதும் சிறப்பானதுமான ஓர் ஆய்வினை மேற்கொண்டு, இறுதியில், ஆசிய உருவாக்க முறை பற்றிய மார்க்சின் கருத்துகள் இந்திய—தமிழக—வரலாற்று உண்மைகளுக்குப் புறம்பானவை என்று நிறுவி முடிக்கிறார்.

இந்தக் கூற்றுக்கு அரண் செய்கின்ற வகையில், பழஞ்சீனாவின் உருவாக்க முறை பற்றியும் மார்க்சுக்குத் தெரியாது என்ற உண்மையினைச் சீன அறிஞர்களினது ஆய்வின் துணை கொண்டு நமக்கு அவர் விளக்கிக் காட்டுகிறார்.

இவற்றின் மூலம், மார்க்சின் உரைகள் அனைத்தையும் தெய்வ-உரைகளாகக் கொள்பவன் அல்லன், மார்க்சின் குறைபாடுகளை-யும் சுட்டிக்காட்டி, அவற்றைப் போக்கிடும் பொருட்டுக் கடின-மாக உழைப்பவனே உண்மையான மார்க்சியன் என்பதனைக் குணா தெளிவாக்குகிறார். அதற்காக நாம் அவரைப் பாராட்டியே ஆக வேண்டும்.

அதே நேரத்தில், மார்க்சினது கருத்தின் குறைபாடுகளுக்கு, அவருக்கு அளிக்கப்பட்ட தவறான செய்திகள்தாம் காரணம் என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை. மேலும், ஆசிய உருவாக்க முறை பற்றிய மார்க்சின் கருத்துகள், வெறும் கருத்துச் சிதறல்களே அன்றி, ஆணித்தரமான ஒரு கருத்துக் கோவை அல்ல என்பதையும் நாம் நினைவில் இறுத்திக் கொள்-வது நல்லது.

மெத்தப்படித்த மார்க்சிய மேதாவிகள் ஒரு சிலரைத் தவிர, செயலூக்கமான மார்க்சியர்கள் யாரும் அவரது ஆசிய உருவாக்க வகை பற்றிய கருத்துகளை வினைவயமாக எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. பெருவாரியான மார்க்சியர்கள் மார்க்சின் நூல்-களைத் தொட்டுக் கூட பார்ப்பதில்லை என்பது வேறொரு கதை.

ஆக, தமிழினத்தின் விடுதலை வேட்கைக்கு அடிப்படையான கருத்துகளை மார்க்சிடம் தேடிக் கொண்டிருப்பது வீண் வேலை என்ற முடிவினை மிகத்தெளிவாக எடுத்துரைத்து நமது பாராட்டு-களைப் பெறுகிறார், குணா.

இரண்டாவதாக, பழந்தமிழகத்தில் நிலவி வந்த உருவாக்க முறையினை ஆய்ந்திடும் முகத்நான் பழந்தமிழ் இலக்கியங்களினுள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்ற கருத்துகளைத் திரட்டித் தொகுத்துப் பழந்தமிழகத்தின் உறவுகளைக் குணா நமது கண் முன் நிறுத்துகிறார். தமிழகத்தின் வரலாற்றினை அறிவியல் முறையாக-மார்க்சிய முறையாக—ஆய்ந்திட வேண்டிய தேவை நம்முன் ஒரு மாபெரும் கடமையாக எழுந்து நிற்கிறது.

பழந்தமிழகத்தின் வரிமுறைகள், கிழார்களின் வல்லாளுமை, அன்றைய பிற பொருளியல் உறவுகள் ஆகியவற்றைத் தமது கடின உழைப்பால் வெளிக் கொணர்ந்து, பழந்தமிழ் நாட்டில் பண்ணைய (Feudal) உருவாக்க முறை நிலவி வந்தது என்ற உண்மையினைச் சுட்டிக்காட்டுகின்ற குணா, புதிய பொது நாயகப் புரட்சிதான் தமிழகத்திற்குப் பொருத்தமானது என்று முடிக்கிறார்.

இந்த முடிவைப் பொறுத்த வரையில் குணாவுக்கும் பிற "இந்தியப் பொதுவுடைமை"களுக்கும் இடையே பெரிய வேறுபாடு எதுவும் இல்லை என்ற போதிலும், உருசியாவிலும் சீனாவிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியச் சூழலின் விடிவு வழிகளைத் தேடித்திரிகின்ற இந்தியப் பொதுவுடைமையர்களைப் போலன்றித் தமிழினத்தின் விடுதலை வேட்கையினைத் தமிழினத்தின் வரலாற்றினுள் தேடுகின்ற தமிழ் மார்க்சியர் அவர் என்பதற்காகக் குணாவை நாம் பாராட்டுகிறோம்,

கால்டுவெல் முதல் பெருஞ்சித்திரனார் வரை, எத்தனையோ தமிழறிஞர்கள் தமிழையும் தமிழ்க் குமுகாயத்தையும் ஆய்ந்து வந்திருக்கிறார்கள் என்ற போதிலும், மார்க்சியத்திற்குத் தேவை இல்லாமலேயே இவர்களில் பலர் தமிழினத்தின் விடுதலையினைப் பறை சாற்றியே வந்திருக்கிறார்கள் என்ற போதிலும், உடலெல்லாம் கண்ணாக உலகை எல்லாம் சுற்றிப்பார்த்து வந்த மார்க்சியர்கள் இன்று தமிழினத்தின் தேசிய ஆதனை (ஆன்மாவினை)த் தமிழ் மண்ணிலேயே தேடிட முற்பட்டிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியான செய்திதானே!

மற்றபடி, மறைமலை அடிகள் முதல் சோமசுந்தரபாரதி வரை, ஏன், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, அண்ணல் ஆதித்தனார் மற்றும் மா.பொ.சிவஞானம் ஆகியோரும் தமிழினத்தில் விடுதலை வேட்கைக்கு வெளிப்பாடு—நல்கியவர்கள் தாமே!

நம் பெருஞ்சித்திரனார், கடந்த 30 ஆண்டுகட்கும் மேலாக அணுவளவும் நிலைவழுவாமல் தமிழினத்தின் விடுதலை வேட்கையினை இசைத்துக் கொண்டு இருக்கவில்லையா? மார்க்சியர்கள் (நான் உட்பட) இதில் ஒரு புதிய வரவு அவ்வளவுதான்!

ஆக, தமிழக வரலாற்றாய்வில் மார்க்சியர்கள் கருத்துச் செலுத்த வேண்டிய கடமையினை மிகச் சிறப்பாக ஆங்கிலத்தில் சுட்டிக் காட்டுகிறார் குணா;

மூன்றாவதாக, இந்தியா என்பது தேசிய இனங்களின் சிறைக் கூடம்; ஆங்கிலேயர் அகன்று விட்டனர் என்ற போதிலும் தமிழினம் இன்னமும் சிறைப்பட்டே கிடக்கிறது; இந்திய வரலாறு என்பது இன்னமும் வடஇந்திய வரலாறாகவே கருதப்-பட்டு வருகிறது; ஆரியமாயையின் விளைவுகள் இன்னமும் நம்மை விட்டு அகன்றிடவில்லை; என்பன போன்ற கருத்துகளை ஆங்-காங்கே பொருத்தமான இடங்களில் குணா அள்ளித்தெளித்துச் செல்கின்ற பாங்கு நம்மைக் கவர்கிறது.

இறுதியாக, ஒரு கேள்வி. தமிழ்நாட்டின் வரலாற்றினை மாக்சிய முறையாக ஆய்ந்து, அன்றைய தமிழகப் பொருளியல் பண்ணைப் பொருளியல் என்று முடிவு கட்டுகின்ற குணா, மார்க்சின் பொருளியல் தீர்மானநிலைக் கருத்தினை (economic determinism) எதிர்க்கிறாரே, ஏன் இ'து அவரது உண்மையான ஆய்வு முறைக்-கும் தமது ஆய்வு முறையாக அவர் கற்பனை செய்து கொண்டிருக்-கின்ற ஒரு முறைக்கும் இடையே உள்ள முரண்பாடு இல்லையா?

பாணினியின் சமசுக்கிருத இலக்கணத்தின் தமிழாக்கம்தான் தொல்காப்பியம் என்றார் வையாபுரியார். இதனால் ''வையாபுரி வகைகள்'' என்ற ஒரு தொடர், தென்மொழி வாயிலாக உருவாக்கப்பட்டு நிலைபெற்று இருக்கிறது. இந்த வையாபுரி வழியைப் பின்பற்றிச் சமணக்கருத்துகளின் தமிழாக்கம்தான் திருக்குறள் என்ற பாணியில் குணாவும் வேறொரு நூலில் கருத்து-களை வெளியிட்டிருக்கிறார்.

இந்த நூலிலோ, திரு. எசு.நாகராசனை அடியொற்றிப் பொருளியலின் தீர்மானப்பாட்டிற்கு எதிராக—மார்க்சியத்திற்கு எதிராக — குணா முகவுரை வழங்க முன் வந்திருக்கிறார். எல்லாம் சேர்க்கைப் பிசகுதான். முகவுரைக்கு முன்னுரை வழங்கியிருப்ப-வர் எசு.நாகராசன் அல்லவா?

பொருளியல்தான் குமுகாய வாழ்க்கைக்கு அடிப்படை என்-பது மார்க்சியம். இது மறுக்க முடியாத வரலாற்று உண்மையும் கூட! தலைவன் — தலைவி பான்மையில் (நாயக — நாயகி பாவத்-தில்) எசு.நாகராசன் மயங்கிப் போகலாம்; ஆனால் மயக்கமே அறிவியல் ஆகிவிடாது.

பணம் என்பதுதான் பொருளியல் என்றில்லை என்றாலும், உருவாக்க உறவுகளின் இடையீட்டுப் பொருள் அஃது என்பதால், பெற்றெடுத்த பிள்ளை மட்டுமன்று, தொட்டுக்கட்டிய மனைவி கூட மதிக்க மாட்டாள் — பணம் இல்லை என்றால் என்ற பட்டினத்தா-ரின் வரிகளைக் குணா சிந்தித்து நோக்க வேண்டும் என்றுகேட்டுக்-கொள்கிறோம்.

இனி, திரு. எசு. நாகராசனின் முன்னுரைக்கு வருவோம்; வரலாற்றுப் பருமைக்கருத்தின் பொருளியல் தீர்மானப்பாட்டுக் கருத்தை இரண்டு காரணங்களுக்காக அவர் மறுக்கிறார் அல்லது எதிர்க்கிறார்.

1. வரலாற்றில் உருவாக்க ஆற்றல்கள் ஆற்றுகின்ற பங்கினைச் சில மார்க்சியர்கள் தேவைக்கதிகமாக வலியுறுத்துகிறார்கள்; இதன்மூலம், குமுகாய உறவுகளும் மேற்கட்டமைப்பின் கூறுகளும் ஆற்றுகின்ற பங்கினைக் குறைத்து மதிப்பிட்டு விடுகிறார்கள்;

உருவாக்கக் கருவிகள்தாம் வரலாற்றை உந்துகின்ற ஆற்றல் வாய்ந்தவை என்றும், அவை சற்று முன்னரோ அல்லது பின்னரோ குமுகாய உறவுகளோடு மோதலுக்குள்ளாகின்றன என்றும் இவர்கள் மீண்டும் மீண்டும் கூறி வருகிறார்கள்;

சொல்லப்போனால், மேற்கட்டமைப்பு என்பது கூட ஓர் ஆற்றல் மிக்க ஆற்றலாகச் செயல்படமுடியும். ஆசியக் குமுகாயங்களைப் பற்றிய ஆய்வில் நாம் எதிர்கொள்ளுகின்ற சிக்கலே இது தான்.

2. வரலாற்றில் தவறான கருத்துகள் கூட பயனுள்ள பங்கினை ஆற்றிட முடியும்; மிகச் சிறந்த கருத்துகள் கூட பயனற்றுப்போக முடியும்.

எசு.நாகராசன் அவர்களுக்கு விடை வரைக்கின்ற வகையில் (குறுவுக்கும் சேர்த்துத்தான்) மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை ஈண்டு விரிக்கில் பெருகும் என்பதால் மிகச் சுருக்கமாக மட்டும் நாம் இவற்றை நோக்குவோம்; (எனது "வரலாற்றின் இயக்கம்" என்ற நூலில் இதுபற்றி விரிவாகக் காணலாம்.)

முதலாவதாக, பொருளியல் என்பது உருவாக்கம், பகிர்வு, நுகர்ச்சி ஆகியவை பற்றிய ஆய்வு அன்று; உருவாக்கத்தில் மாந்தர்கள் கொள்ளுகின்ற உறவுகளைப் பற்றிய ஆய்வு (பார்க்க: இலெனின் நூல் திரட்டு, தொகுதி 3, பக். 62-3), இந்த உருவாக்கம் உறவுகள்தாம் குமுகாயத்தின் பிற அனைத்து உறவுகளையும் தீர்மானிக்கின்றன. உருவாக்க உறவுகளின் வகைகளோ உருவாக்க ஆற்றல்களின் வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப அமைகின்றன. குமுகாய வாழ்க்கையைத் தீர்மானிப்பது மாந்தனின் உணர்மை (consciousness) அன்று; மாறாக, குமுகாய வாழ்க்கைதான் உணர்மையைத் தீர்மானிக்கிறது, (பார்க்க: மார்க்சு, அரசியல் பொருளியல் திறனாய்விற்கு ஒரு பங்களிப்பு; முகவுரை) இதுதான் குமுகாய அமைப்புப் பற்றிய மார்க்சின் பொதுவான கருத்தாக்கம்.

இந்த அடிப்படை மார்க்சியம்தான் எசு.நாகராசனின் மூளையை உறுத்துகிறது. இந்த மூளை உறுத்தலைக் குறு சொரிந்து விட்டு விட்டதாக எண்ணிக்கொண்டு அவர் மகிழ்கிறார்.

முதலாவதாக, "உருவாக்க ஆற்றல்கள்" என்பதும் "உருவாக்கக் கருவிகள்" என்பதும் ஒரு பொருட்கிளவிகள் அல்ல என்பதை எசு.நாகராசன் மறந்து விடுகிறார். கீழ்க்கட்டமைப்பு மேற்கட்டமைப்பு என்பவை எல்லாம் வெறும் கல்லடுக்கு அமைப்புகள் அல்ல; மாறாக, "உறவின் அமைப்புகள்" என்பதை-

யும் பருமை உறவுகள் கோட்பாட்டு உறவுகளைத் தீர்மானிக்கின்-றன வென்றால் இவ்விரு வகை உறவுகளும் தனித்தனியாக நின்று இயங்கும் தன்மையில் அன்றி, பின்னிப் பிணைந்து கிடக்கின்ற தன்மையில் இயங்கி வருகின்றன என்பதையும், இவ்வுறவுகள் அனைத்தும் உருவாக்க ஆற்றல்களின் வளர்ச்சி நிலைகளைச் சுற்றிச் சுழல்வன என்பதையும் கூட அவர் மறந்து விடுகிறார்.

மறந்துவிட்டு, உருவாக்க ஆற்றல்களாவது உறவுகளோடு மோதுவதாவது என்று கேள்வி போடுகிறார், எனவே, இந்த மோதல்தான் செயலூக்கமான குமுகாயக் கருத்துகளைப் போராடும் மக்களிடையே (நாகராசனிடம் அன்று) உருவாக்குகின்றன என்பதை எண்ணிப் பார்க்கத் தயங்குகிறார்.

ஆனால், மார்க்சு கூறுகிறார், உருவாக்க ஆற்றல்கள் போதுமான அளவுக்கு வளர்வதற்கு முன்னர் எந்தப் பழைய அமைப்பும் புதிய அமைப்புகளால் மாற்றியமைக்கப்பட்டது இல்லை என்று!

மார்க்சியம் என்பது அடிப்படையில் ஒன்றரைப் பக்கம்தான். (பார்க்க: அரசியல் பொருளியல் திறனாய்விற்கு ஒரு பங்களிப்பு, முகவுரை) இந்த ஒன்றரைப்பக்கத்தை ஆய்ந்து அறிவதற்குதான் நாகராசனுக்கு நேரம் கிடைக்கவில்லை.

ஆனால் கேள்வி போடுகிறார், வெடிமருந்து கண்டதும், அச்சடிக்கத்தெரிந்து கொண்டதும், திசைமானி கண்டதும் சீனர்கள் தாமே, அங்கு ஏன் முதலாண்மை வளரவில்லை, என்று! தெரிந்திருந்தால் போதுமா? வாழ்க்கையில் பயன்பட வேண்டாமா? அறிவியல் அறிவு தொழில் நுட்பமாகி வாழ்க்கையில் பயன்படாதவரை அறிவியலால் என்ன பயன்?

எசு.நாகராசன் கூடத்தான் தலைவன்—தலைவிப் பான்மையில் மயங்கிக் கிடக்கிறார். அகநானூற்றில் காண முடிகின்ற அதனை இன்றைய வாழ்க்கையில் காணமுடியவில்லையே, ஏன்? அறிஞர் நாகராசன் கீழ்நிலை எளிய மக்களைப் புரிந்து கொள்ள முன்வர வேண்டும்.

இரண்டாவதாக, சரியான கருத்துகள் தோற்றதும் இல்லை; தவறான கருத்துகள் வென்றதுமில்லை என்பதை நாகராசன் அவர்கள் ஆணித்தரமாக மண்டையில் இறுத்திக்கொள்வது நல்லது. நாகராசனுக்குத் தவறாகப்படுகின்ற காரணத்தால் வெற்றி பெறுகின்ற எளிய மக்களின் கருத்துகள் தவறாகிவிடுமா? அல்லது காலவரையறை ஏதுமின்றிச்சரியானகருத்து என்றுதான் கருத்துகளைப் பகுத்திடமுடியுமா? எது சரி, எது தவறு என்பதை யார் தீர்மானிப்பது?

காலம் கருதி இடத்தால் செய்தால்தானே, ஞாலம் கருதினும் கைகூடும்!

ப்ருனோ பாயர் என்றொருவர் இப்படித்தான் செர்மனியில் முழக்கமிட்டு வந்தார். அவருக்கு மார்க்சு கூறிய விடையையே நாம் நாகராசனுக்கும் கூறுவோம்.

(தொடர்ச்சி 27-ஆம் பக்கம்)

அத்திப்பூ

நாடக ஆக்கம் -அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 'பாவியக் கொத்'தில் ஒரு மலர்.)

காட்சி—3

உறுப்பினர் : அன்பரசன், அன்பரசனுடைய தாய், அன்பரசனுடைய தங்கை, நண்பர் நால்வர்.

இடம் : தனியறை.

காலம் : இரவு.

அன் : (பலகணி வழியாக வெளியில் எட்டிப் பார்க்கிறான், பெண்கள் அனைவரும் போய் விட்டார்கள். தனித்திருக்கிறான்.)

அன்-தங் : (அறைக்குள் நுழைந்து) என்ன அண்ணா! கவலையோ? வேண்டாம்; வேண்டாம். அண்ணி வந்துவிடுவார்கள் இங்கு; அண்ணா! இனி உங்கள் அன்பு யாவும் அண்ணியின் பக்கந் திரும்பும் அல்லவா?

அன் : (சிரித்து) ஆமாம். உனக்குத் திருமணமானால் உன் அன்பு எங்கே போகும்?

அன்-தங் : சும்மா இருங்களண்ணா; என் அன்பு எங்கேயும் போகாது; உங்கள் அன்புதான் அண்ணியின் மடியில் உறங்கும்.

அன் ; என் அகஅன்பு உன் அண்ணிக்கே. புறஅன்பு உறவினர்க்கே. அதுபோலவே உனக்குத் திருமணமானவுடன் உன் அகஅன்பு உன் கணவனுக்கும் புறஅன்பு சுற்றத்தாருக்கும் உண்டு.

அன்-தங் : எத்தனை இருந்தாலும் அண்ணியுடன் ஒன்றி விடுவீர்கள்!

அன் : உண்மைதான். அதுதான் வாழ்க்கை. அப்போது தான் இன்ப துன்பங்களைப் பங்கிட்டுக்கொள்ள முடியும். அன்புத் தங்கையே இந்நாள் வரை ஒன்றிய உன் அன்பையும் மறக்க மாட்டேன். உன் பெருமைகளை உன் அண்ணியிடம் எடுத்துக் கூறுவேன்; சிறக்கப் பேசுவேன்.

அன்-தங் : அப்படியா? கூறுவீர்களா?

அன் : ஆம்; கட்டாயம் கூறுவேன், அதை அவள் கேட்டுப் பெருமை அடைவாள்; அருமையாக உன்னைப் போற்றுவாள்.

அன்-தங் : (சிரித்துக் கொண்டு) அண்ணா நான் வருகிறேன்; நீங்கள் வாழ்க! (போய் விடுகிறாள்)

நண்-4 : (அறைக்குள் நுழைந்து கொண்டே)

நண்-1 : என்னடா அன்பு, உன்னைச் சிறை வைத்து விட்டார்களா?

அன் : நீங்கள் ஊருக்குப் போய் விட்டீர்கள் என்றல்லவா எண்ணி இருந்தேன்.

நண்-2 : ஏன்டா, முன்னால் விருந்துக்கு வந்தால் இருந்துபோ என்பாய்; நினைவில்லையா? விருந்து முடிந்ததுபோ என்கிறாய் இப்போது.

நண்-4 : (சேர்ந்து சிரிக்கிறார்கள்)

நண்-3 : முன்பு விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கே என்பேன் நான். அப் பழமொழி நமக்குப் பொருந்தாது என்பாய் நீ. இன்னும் நான்கு நாள்களுக்கு இருந்து போ என்று கட்டாயப் படுத்திக் கைப்பையைக் கூடப் பிடுங்கி வைத்துக் கொள்வாய். தனி இரவு வந்ததும் தள்ளிப் போ என்கிறாய். அடேய் அப்பா, மனைவி வந்ததும் மனமே மாறும் போலும். ஏன்டா தனியாய் ஏன் இருக்கிறாய்? வெளியே வாயேன்.

நண்-1 : இனி வருவானா? மணமகள் வருகைக்குத் தவங் கிடக்கிறான்; அவனைப் போய் வாவென்றால் நம்மைப் போ வென்பான்.

நண்-4 : (சேர்ந்து சிரிக்கிறார்கள்)

அன் : போக வேண்டாமடா நீங்கள்; (பண்டங்களைக் காட்டி) —இதோ இருக்கிறதே பழங்களும், பண்டங்களும் உங்கள் விருப்பப்படி எடுத்து உண்ணுங்கள்.

நண்-4 : ஏய், தப்புத் தப்பு. உன் மனைவி வந்து, அப்படியே கடைக் கண்ணால் உன்னை ஒரு வெட்டு வெட்டிப் புன்முறுவல் பூத்து, விண்ணில் பறந்த உன் எண்ணங்களைத் தன் பக்கம் இழுத்து. சலங்கைக் காலை ஒரு தட்டுத் தட்டிச் சிணுங்கி சித்துப் பூத்தென்று கொஞ்சம் ஊடிப், பாடி ஆடி, அண்டைப் பண்டங்களை ஊட்டி இன்பங் கூட்ட அப்பண்டங்கள் இருக்கின்றன, அப்பா! அவற்றை நாங்கள் உண்டால் உன் நிலை என்ன ஆகும்?

நண்-2 : முக்கனிச் சாறும் முந்தாநாள் உனக்குத் தெவிட்டி இருக்கும். இன்று உன் மனைவியின் கையால் கொடுக்கும் பச்சைத் தண்ணீர் பாலோடு தேன் கலந்த சுவையை உடலுக்குத் தந்து ஓர் உயிரை வளர்க்கும்.

நண்-1 : இந்தத் தேனிராதான் உலகத்தில் உன்னை வாழச் சொல்லும். ஏன் தெரியுமா? இந்தப் பூவையர் தரும் ஐம்புலன் இன்பத்தை மறக்கவும் முடியாது; துறக்கவும் இயலாது.

அன் : புத்தர் துறந்தாரே!

நண்-1 : அவருங்கூட மனைவியோடு சேர்ந்து காம இன்பத்தைச் சுவைத்தார். ஒரு பிள்ளையைப்பெற்ற பிறகுதான், மனைவிமேல் இருந்த அன்பை மக்கள் பக்கம் திருப்பினார். நீ மனைவி அறைப் பக்கம் வரவில்லையே என்று ஏங்குகிறாய்; அவர் மக்கள் அறிவின் பக்கம் வர மறுக்கிறார்களே என ஏங்கினார். அதனால்தான் துறந்தார்.

நண்-4 : துறவைப் பற்றி இப்பொழுதா பேசுவது? ஈருயிர் பிணைந்து மூவுயிராகும் நல்லிரா இது. வாழ்த்துங்கடா எல்லோரும்.

நண்-4 : (நால்வரும் சேர்ந்து) வாழ்க, வாழ்க வருகிறோம்! (போய் விட்டனர்)

நண்-3 : (கடைசியில் போகும்போது) மறந்து விடாதே எங்களை. (போய் விட்டான்)

அன்-தாய் : (அறைக்குள் வருகிறார்)

அன் : (எழுந்து) என்ன அம்மா. வாருங்கள்.

அன்-தாய் : உன்னைப் பார்த்து மகிழ்ந்து போகவே வருகிறேன்.

அன் : மகிழ்ச்சியோடு இருக்கிறேன், அம்மா என்னைப் பெற்று வளர்த்த தாங்களுடைய பெயருக்கு மேலும் 'புகழ்' வர இல்லறத்தை நல்லறமாக நடத்துவேன். கவலை வேண்டாம். தாயே எல்லாச் செல்வங்களையும் தந்திருக்கிறீர்கள் அல்லவா?

அ-தாய் : உன்னைப் பெற்றபோது மட்டற்ற மகிழ்ச்சியடையந்தேன். உன்னைக் கண்மணியைக் காப்பதுபோலக் காத்தேன். உன் தந்தை உன்னை அறிவு உள்ளவனுக்கவே விரும்பினார். அதனால் அன்புக்குச் சான்றாக அருள் உடையவனாகவும் அறிவிற்குச் சான்றாகப் பகுத்தறிவு உடையவனாகவும் விளங்கி, நீ ஒரு சான்றோனாக வாழ்ந்தால் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பன்மடங்கு மகிழ்ச்சியடைவேன்.

அன் : அம்மா உன் கையால் (பாலிருக்கும் குவளையைக் காட்டி) அந்தப் பாலை எடுத்துக் கொடு.

அ-தாய் : (சிரித்து) வேண்டாம். உன்னைப் பெற்றபோது குன்றின் அளவு மகிழ்ந்திருந்தேன். ஆனால் உன்னை ஒரு பெண்ணிடம் ஒப்புக் கொடுத்துக் காணும் மகிழ்ச்சி வான அளவு உயர்ந்தது. உன்னைப் பெற்றேன். பாலூட்டிச் சீராட்டி வளர்த்தேன். என் தாய்மொழியை உனக்குத் தாய்மொழியாக்கினேன். தப்பும் தவறுமாக மழலையாகத் தமிழைப் பேசினாய். அந்தத் தப்பைக் கண்டு என் மனம் பொறுக்காமல் கொஞ்சிக் கொஞ்சிக் கற்பித்தேன். தவறும்போது கெஞ்சிக் கெஞ்சித் திருத்தினேன். பள்ளிக்குச் சென்றாய். உன் முன் அழகையும் பின் அழகையும் கண்டு பெருமிதங் கொண்டேன். நீ திருத்தமாய் தமிழைப் பேசியதைக் கண்டு மகிழ்ந்தேன். நீ ஒரு தமிழ் அறிஞன் ஆனதை எண்ணி அளவிலாக் களிப்பு அடைகிறேன். இனி உனக்கு யாவும் உன் மனைவியே. அவளே உனக்கு உணவு தர வேண்டும்.

அன் : அம்மா உன் எண்ணப்படி...

அன்-தாய் : (சட்டென்று) விரையாதே. எனக்குத் தெரியும் நீ என்ன சொல்லப் போகிறாய் என்று. நான் சொல்வதை நன்றாகக் கேட்டுக் கொள், உலகத்தில் தாயாகிய பெண்ணுக்குக் கோவில் கட்டி வணங்கியவன் தமிழன்தான். பெண்மையை அன்னை

என்று மட்டும் மதிக்கவில்லை. ஆண்டாள் என்று. தெய்வமாக எண்ணி வணங்கி எழுந்தான், அந்தப் பெண்ணை அடிமைப் படுத்தித் திருக்கலியாணம் என்றோர் அமைப்பை அமைத்தான். அந்தப் பெண் தெய்வத்துக்கே தாலி கட்டினான். அவளை இழிவு படுத்த அதை அறுத்தான். அப் பெண் தெய்வத்தைச் சந்தியில் வைத்து இழிவு படுத்திக் கொண்டிருக்கிறான் இந்த நாட்டில்.

அன் : அம்மா...

அன்-தாய் : சற்று பொறு இன்னும் சொல்லுகிறேன். கற்பு என்ற ஒன்று பெண்களுக்கென்று படைக்கப் பட்டிருக்கிறது தெரியுமா? உனக்கு.

அன் : கற்பு என்பதைக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவ்வொழுக்கம் பெண்களுக்கு மட்டுமானது என்பது தெரியாது.

அன்-தாய் : நல்லவேளை தெரியாமல் போனது. இனி உனக்கும் அதைக் கற்பித்து விடுவார்கள். கேள், கற்பு ஓர் ஒழுக்கம் அப்படித் தானே!

அன் : ஆமாம்.

அன்-தாய் : அதைப் பெண்கள் மட்டுந்தாம் கடைப்பிடிக்க வேண்டுமாம்.

அன் : அதென்ன அப்படி? ஆண்களாய்ப் பிறந்துவிட்டால் ஒழுக்கம் வேண்டாமாமோ?

அன்-தாய் : அப்படித்தான் கதை எழுதி வைத்திருக்கிறார்கள்.

அன் : எவன் எழுதி வைத்திருக்கிறான்?

அன்-தாய் : வடக்கத்தியான்.

அன் : வடக்கத்தியான் எழுதிய கதையை இவன் படிக்கலாமா? ஏம்மா, இராமாயணம், மகாபாரதக் கதையைச் சொல்லுகிறீர்களோ?

அன்-தாய் : ஆமாம். ஆமாம் அதே தான்.

அன் : அலைதத் தள்ளு குப்பையிலே! வேறு எதையும் சொல்லப் போகிறீர்களோ?

அன்-தாய் : அஃதாவது ஓர் ஆண் திருமணத்திற்கு முந்தி பல பெண்களோடு கூடினாலும் தவறில்லை. அவன் வேறு ஒரு பெண்ணைத் தங்கு தடையின்றி திருமணஞ் செய்து கொள்ள இக் குமுகம் ஒப்பும். ஆனால் ஒரு பெண் அவ்வாறு செய்தால் அவளை எவனும் திருமணஞ் செய்து கொள்ளக் கூடாது. அவள் ஒதுக்கப்பட்டவள்.

அன் : இருவரும் சேர்ந்து ஒரு குற்றத்தைச் செய்தால் இருவருக்கும் தண்டனை உண்டே. அதில் ஒருவரை மட்டும் தண்டிப்பது ஓர வஞ்சனையாயிற்றே! வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம் என்பது சான்றோர் கூற்று. எனவே வஞ்சனைக் கூட்டத்தை எதிர்த்துவிட வேண்டியதுதான். இணங்க வேண்டாம்.

பாவலரேறு பாடல் பல கோணங்களில்!

பறம்பை அறிவன்

தன்னாட்சி வேண்டும்;

'தமிழ்நிலம் வடவரின் வல்லாளுமையினின்றும் மீள வேண்டும்' என்ற 'கொள்கையைக் கரணிய கருமிய முறைப்படி வலியுறுத்துவதாகுமிப் பாடல்.

கனிச்சாறு பாடல் விளக்கக் குறிப்புகள் நாட்டுரிமை 1 இரண்டாந் தொகுதி:

தமிழ்நிலம், பல்வேறு வல்லாளுமைகளால் தாக்குண்டு தட்டுக் கெட்டுத் தடுமாறி தளர்ந்து கிடக்கின்றது. அவற்றுள் 'வடவரின் வல்லாளுமையைப்' பாவலரேறு முகாமையானதாகக் கொண்டு இப் பாடலைப் புனைந்துள்ளார் என்பது தேற்றம்.

1970 இல் இப்பாடல் இயற்றப் பட்டுள்ளது; அன்றைய, தமிழகச் சூழல் சிந்தனையழுத்தம் பற்றிய ஆய்வு தனியே மேற்கொள்ளத் தக்கதாகும். பாட்டின் அகத்தும் புறத்தும் சென்று தேடினால் பலவுண்மைகள் புரிய வரும்.

(தொடர்ச்சி 31-ஆம் பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

அன்-தாய் : ஆம். நான் உன்னிடம் எதிர்பார்ப்பதும் அதுவே. 'ஈருயிர் ஒருடல்' என்று சொன்னால் மட்டும் போதாது. நடைமுறைக்கு அதை இழுத்துக் கொண்டு வந்தே வாழவேண்டும். நான் உன் தாய் என்பதால் அன்பு காட்டுவது போன்று, நான் ஒரு பெண் என்பதாலும் பொது அன்பைப் பெண்ணிடம் காட்ட வேண்டியதும் உன் கடமை. அவ்வறிவுரையைக் கூறவே உன்னை இந்த இன்ப நேரத்தில் சந்திக்கிறேன். மகனே ஒரு பெண் ஓராணுக்கு இன்பத்தைக் கொடுத்து விட்டுக் குமுகாயத்திலிருந்து துன்பத்தையே எதிர்நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கிறாள். எனவே நான் சொன்னவற்றையும் மறவாதே. என்னையும் மறந்து விடாதே. இதையும் உன்னிடம் நான் எதிர்பார்க்கிறேன். நான் வருகிறேன் (போய் விடுகிறாள்.) திரை. (தொடரும்)

(22-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களது கூற்றின்படி ''செயல்படுகின்ற மக்கள் அல்லர், நிகழ்முறையான செயல் அன்று, அல்லது செயலின் நிகழ்முறையான நலன் அன்று, மாறாக, அவற்றில் உள்ள கருத்துதான் வரலாற்று நடவடிக்கைகளில் முகாமை''.

(பார்க்க: புனித குடும்பம். பக் 96—7)

ஆக, எசு.நாகராசனின் ''சரியான'' கருத்து, மக்களுக்குத் தேவையான கருத்தாக மாறுகின்ற பொழுதுதான் வரலாற்றில் பயன்படுகின்ற கருத்தாக விளங்கிட முடியும்.

குணாவின் பணிகள் விடுதலையாக வளர்ந்து சிறக்க நமது வாழ்த்துகள்.!

○

செய்திகள்

1. தமிழோசைப் பண்பாட்டுப் பேரவை—திருத்துளார்:

கடந்த தி. பி. 2021 சுறவத்திங்கள் 8-ஆம் பக்கல் 21-1-90 ஞாயிறு மாலை 6 மணியளவில், திருச்சி மாவட்டம், செயங்கொண்டம் வட்டத்திலுள்ள, திருத்துளார் என்னும் சிற்றூரில் தமிழோசைப் பண்பாட்டுப் பேரவையின் அறிமுகக் கூட்டம் நடை பெற்றது. நிகழ்ச்சிக்கு, புலவர். திரு. வேலாயுதனார் தலைமையேற்றார். திரு. பொ. இளவழகன் வரவேற்புரை ஆற்றினார். தலைமையுரைக்குப் பின்னர் திரு. பா. மணவாசகன் அறிமுகவுரையும், திரு. மூ. நாவளவன் கொள்கை விளக்கமும் கூற, பேரவை இணைப்புரையை திரு. சு. இளமுருகன் ஆற்றினார். பின்னர் புலவர் திரு. ந. கிருட்டிணமூர்த்தி, திருவாட்டி. தாமரை பெருஞ்சித்திரனார் ஆகியோர் வாழ்த்துரைக்குப் பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புரையாற்றினர். இறுதியில் திரு. இரா. முருகானந்தம் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது. நிகழ்ச்சிக்கிடையில் வெற்றி(ஜெயங்)கொண்ட சோழபுரத்தைச் சேர்ந்த தமிழன்பரீ கி. இராசேந்திரன் கீழ்வரும் பாக்களைப் பாடிப் பெருஞ்சித்திரனார் இணையரை வாழ்த்தி வரவேற்றது குறிப்பிடத் தக்கது. அவர் வாழ்த்திய பாக்கள்.

ஒருங்குடன் ஒண்டமிழை ஓங்குவிக்க எம்மை
உருவாக்க வந்த ஒளியாய்க்—கருவில்
திருவுடன் தோன்றிப் பெருஞ்சித் திரனென்(று)
ஒரு பெயருற் றுய்வருக ஊங்கு!

கொள்கைக் கதிரவன் கொஞ்சு தமிழ்க் காவலன்
உள்ளுவார் உள்ளத்துத் தேனவன்—வள்ளல்
தமிழ்ப்பெருஞ் சித்திரனார் தாமரையே தேனை
உமிழ்வாய் உரையாய் உவந்து!

2. தமிழின எழுச்சி மாநாடு—ஒசூர்:

ஒசூரில், கடந்த 25-1-90, 26-1-90 ஆகிய இரு நாள்களிலும், ஒசூர், பாகலூர், திருவள்ளுவர் இலக்கிய மன்றம் சார்பில், வட்ட அலுவலகச் சாலையில் அமைந்த தாளமுத்துத் திடலில், தமிழின எழுச்சி மாநாடு நடை பெற்றது.

முதல் நாள் மாலை 6 மணியளவில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு முனைவர் மா. நன்னன் தலைமை தாங்கினார். தொடக்கவுரையை திரு. சண்முகசுந்தரம் நிகழ்த்தினார். இரவு 8 மணியளவில் 'வரலாற்று வானின் வாழ்ஒளிச் சுடர்கள்' என்னுந் தலைப்பில் பாவலர்கள் செல்வ கணபதி, இக்பால், அப்துல் காதர், அறிவுமதி ஆகியோர் பாடல்களை அரங்கேற்றினர்.

மறுநாள் (26-1-90) காலை 9 மணியளவில் பட்டுக்கோட்டை அழகிரி, அரங்கநாதன், பெரியார், பாவேந்தர், தாளமுத்து அறிஞர் அண்ணா ஆகியோர் படங்களை, முறையே கோவை

இராமகிருட்டிணன், மு. சண்முகம், கொளத்தூர் மணி, சண்முக சுந்தரம், புலவர் கிறா , கி. சோழன் ஆகியோர் திறந்து வைதது உரையாற்றினர்,

அன்று மாலே 3 மணியளவில் வழக்காடு மன்றம் 'தமிழினம் ஏழவில்லே' என்னுந் தலைப்பில் பேரா. ஞானசுந்தரம் நடுவராக இருக்க, வழக்குத் தொடுப்பவராக பேரா. தி. இராசகோபாலன் அவர்களும், மறுப்பவராக பேரா. அப்துல் காதர் அவர்களும் வழக்காட, சிறப்புற நடைபெற்றது.

இறுதி நிகழ்ச்சியாக, அன்று மாலே 7 மணியளவில் 'மொழியுணர்வும் தேசியமும்' என்னுந் தலைப்பில். பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஏறத்தாழ இரண்டு மணி நேரம் நிறைவுரையாற்றினார். இவ்வுரை மாநாட்டிற்குக் கொடுமுடியாக, மகுடம் வைத்தாற்போல் இருந்தது. மாநாட்டு அரங்கமே உணர்ச்சிக் கொந்தளிப்பால் நிறைந்து விளங்கியிருந்தது. மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அவ்வுரையால் புத்துணர்வும் புரட்சி மனமும் மலர்ச்சியுற்றவர்களாகக் கலைந்து சென்றார்கள். இறுதியாக, மூவேந்தன் நன்றியுரையாற்றினார்.

3. இளைய ஞாயிறு—மலர்விழி மங்கை வாழ்க!

சென்ற 31-1-90 அறிவன் கிழமை காலே 9 மணியளவில், மேலூர், மூவேந்தர் பண்பாட்டுக் கழகத் திருமண்டபத்தில், செல்வன் இளையஞாயிறு—க்கும், செல்வி மலர்விழி மங்கை—க்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் இனிதே தமிழ்த் திருமணம் நடைபெற்றது, மணமக்களை வாழ்த்தி பேரா. க. திருமாறன், உ. த மு. க. துணைப் பொதுச் செயலர் அறிஞர். பறம்பை அறிவனார் ஆகியோர் நல்லுரை வழங்கினார்கள். புலவர் கந்தையா அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

4. ப. அரவிந்தன்—ச. சரசுவதி வாழ்க!

சென்ற தி. பி. 2021சுறவம் (தைத்)திங்கள் 19-ஆம் பக்கல் (1-2-90) வியாழக்கிழமை, வ. ஆ. மாவட்டம் நெமலி, குமரன் திருமண மாளிகையில், செல்வன் ப. அரவிந்தன் அவர்களுக்கும், செல்வி ச. சரசுவதிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம இனிதே நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி, மு. கதிரவன், இறை. பொற்கொடி, தமிழ் மணி, தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கலைச் சொல்-தூய தமிழ் அகராதிகள் பதிப்பாசிரியர், சொல்லாய்வறிஞர் ப. அருளி ஆகியோர் நல்லுரை வழங்கினர்.

5. குடியரசு நாள் விளக்கப் பொதுக் கூட்டம்:

கடந்த 1-2-90 வியாழன் மாலே 6 மணியளவில் பனப்பாக்கம், பெரியார் திடலில் தமிழ்நாடு இளைஞர் பேரவை, தமிழ்நாடு மாணவர் பேரவை—சார்பில், குடியரசு நாள் விளக்கப் பொதுக் கூட்டம்' நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் தமிழ். முகிலன் (தமிழ்

நாடு இளைஞர் பேரவை) வரவேற்புரையாற்றினர். நிகழ்ச்சியில் பாவலரேறு பெருஞ்சித்திரனர் (முதல்வர் உ. த. மு. க.) சொல்லாய்வறிஞர் அருளி (தமிழினத் தொண்டியக்கம்), புலவர் தமிழேந்தி (மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி, இறை. பொற்கொடி (தமிழ்நாடு மகளிர் பேரவை) ஆகியோர் கருத்துரை வழங்கினர். இறுதியில் வாசுதேவன் நன்றி கூறினர்.

6. மறைமலையடிகளுக்கு எதிர்ப்பா?

தமிழர் பாசறையின் கண்டனக் கூட்டம்!

கடந்த 15-2-90 சென்னை, மயிலாப்பூர், சீனிவாச சாத்திரி மண்டபத்தில், மறைமலைநகர்—தொடர்வண்டி நிலையப் பெயர் மாற்றக் கோரிக்கைக்குத் தமிழர் பாசறை சார்பில் ஒரு கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் தலைமை தாங்கினர். திருவாளர்கள் பெருஞ்சித்திரனர், பழ. கருப்பையா, பேரா. இரா. இளவரசு, பாவலர். பொன்னடியான், பெரும்பாக்கோ வா. மு. சேதுராமன், புலவர் த. அழகரசன், சே. தா. விசயராகவன், முனைவர் மெ. சுந்தரம் ஆகியோர் கருத்துரையாற்றினர். தொடக்கத்தில் புலவர் பி. சி. கணேசன் வரவேற்புரையும், இறுதியில் பாவலர் வெற்றியழகன் நன்றியுரையும் ஆற்றினர்.

7. தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாடு:

சென்ற 25-2-90 ஞாயிறு அன்று சென்னை, பெரியார் திடலில், இந்திய மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி (எம். சி. பி. ஐ) சார்பில், 'தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாடு' ஒன்று நடைபெற்றது.

அதன் காலை நிகழ்ச்சியாக 9 மணியளவில் தேனிசை செல்லப்பா. குழுவினரின் கொள்கைப் பாடல்கள் முழக்கப் பெற்றன. பின்னர் 10 மணி முதல் கருத்தரங்கம் நடைபெற்றது. வரவேற்புரையை அ. பத்மநாபன் நிகழ்த்தினர், நிகழ்ச்சிக்கு முனைவர். சௌ. வேணுகோபால் க. மு. மெய். மு; க. மு. மொழி தலைமை தாங்கித் தலைமையுரை செய்தார். அவரைத் தொடர்ந்து, 'தமிழ்த் தேசிய இன எழுச்சி வரலாறும் படிப்பினைகளும், என்ற தலைப்பில் முனைவர். சுப. வீரபாண்டியன் க. மு. அவர்களும், 'தேசிய இனப் போராட்டம்-உலகு தழுவிய அளவில் என்னுந் தலைப்பில், காரல்தாசு க.இ. (ச. இ.) அவர்களும், 'தேசிய இனப் போராட்டம்—இந்திய அளவில், என்ற தலைப்பில், பாவலர். இன்குலாப் அவர்களும், 'தன்னுரிமையா மாநில சுயாட்சியா?' என்ற தலைப்பில் அசுவ கோசு அவர்களும், 'தேசிய இனச் சிக்கலும் வர்க்கப் போராட்டமும்' என்ற தலைப்பில், பாவலர் தணிகைச் செல்வன் அவர்களும், தன்னுரிமை கொண்ட தமிழகத்தில் தமிழர்களின் புதுவாழ்வு' என்ற தலைப்பில் கி. வெங்கட்ராமன் அறி. இ. அவர்களும் சிறந்த கருத்துரைகளை ஆற்றினர்கள்.

அதன் பின்னர், இடைவேளைக்குப் பின்னர் பிற்பகல் 3 மணிக்குக் காஞ்சி, கலைக் குழுவின்,இன்னிசை மற்றும் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அனைத்துக் கல்லூரி மாணவப் பேராளர்கள் பங்கு கொண்ட மாணவர் அரங்கம் நடைபெற்றது. அதற்கு சு. இராசன் அறி. மு. தலைமை தாங்கினர், பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. அதைத் தொடர்ந்து பெ. மணியரசன் அவர்களின் 'இந்தியாவில் தேசிய இனங்கள்' என்னும் நூலை முனைவர். ந. பிச்சமுத்து வெளியிட்டார். அதன் பின் பாவலர் தமிழன்பன், பாவலர். அறிவுமதி ஆகியோர் தங்கள் சிறப்புப் பாக்களைப் படித்தனர்.

பின், மாலை நிகழ்ச்சியாக, எம். சி. பி. ஐ. யின் மாநிலச் செயலர், பெ. மணியரசன் தலைமையில் அறிஞர்களின் சிறப்புரைகள் நிகழ்ந்தன. அவற்றில், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் பேரா. தீரன், அறிவியக்கப் பேரவைத் தலைவர் முனைவர் சாலை. இளந்திரையன், எம். கே. ஈழவேந்தன், செல்வி. அருள்மொழி, கொளத்தூர் தா. செ. மணி, ப. சண்முகசுந்தரம், வெ. பன்னீர்ச் செல்வம், நகைமுகன் இராமச்சந்திரன், கன்னியாகுமரி பி. எசு. மணி ஆகியோர் உரைக்குப் பின்னர், இறுதி உரையாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்களும் கருத்துரையாற்றினர். வண்ணை. நக்கீரனின் நன்றியுரைக்குப் பின் இரவு 11 மணியளவில் மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறைவுற்றன. ○

(27-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக் கனிச்சாறு தொகுப்புகள் கால வரிசையைப் பின்பற்றவில்லை. ஆனாலும் இவ்விரண்டாம் தொகுப்பு, 1952—1977 கால எல்லை உடையது. 25 ஆண்டு காலம் என்பது ''ஒரு தலைமுறைச் சிந்தனை'' கொண்டது. இந்த வரைவு நம் ஆய்வுக்குத் தெளிவான பார்வையைக் கொடுக்கும் என நம்புகிறேன்.

இவ்விருபத்தைந்து ஆண்டுக் காலச் சுழற்சியில் பாவலரேறு கருத்தும் அதன் வீச்சும் அடுத்த கால கட்டத்தில் ஏற்படுத்திய விளைவுகள் உண்டா என்பதையும் காண முடியும்.

'தன்னுட்சி பெற்று விட வேண்டும்' என்ற உணர்ச்சி இக்கால் அழுத்தம் பெற்றுள்ளது. அதேவேளை, 'ஒற்றுமை ஒற்றுமை', 'ஒருமைப்பாடு ஒருமைப்பாடு' என்ற குரல் ஒலிப்பது வேகமாகி வருவதையும் காண்கிறோம்! வடவர் பிடியிலிருந்து 'விலகுதல் பகை' என்ற நினைப்பு அச்சமாகியுள்ளது. விடுதலை மூச்சு முன்னே, ஆளும் வடவர் கும்பல்—நடுங்குவது ஆட்டம் போடுவது தெளிவாகிக் கொண்டிருக்கின்றது.

இத் தன்னுட்சி முழக்கமிட்ட அதே காலத்தில் 'புதுமை இலக்கியம் பொதுமை இலக்கியமாய்ப் பூக்கட்டும்' என்ற விருப்பவுறுதியைப் பாவலரேறு எழுதிய 'புதுமை இலக்கியம் புனைக இளைஞனே' என்ற பாட்டில் காண முடிகிறது.

'தன்னுட்சி' உரிமை கேட்டல், பொதுமைக்கு பாட்டாளிக்கு எதிரானதன்று என்பதில் பாவலரேறு உறுதியாய் இருந்திருக்-

கிறார்! தேசிய இனம் தன்னாட்சி பெறும் போது, முதலாளியத்தின் கை ஓங்கி விடும் என்ற கருத்தைப் புரிந்து கொண்டு, தொடக்கம் முதலே, அதனை எதிர்த்துப் போராடும் எழுச்சிப் பாக்களைப் பாடவும் பாவலரேறு தவறவில்லை.

பார்ப்பனியம் பிறப்பு முதலாளியச் சிந்தனையை வேராகக் கொண்டது. அவ் வேரினை—ஆணி முதல் பக்கம் வரை யோடிப் பரவிய போக்கினை-நன்கு தெரிந்து வைத்திருக்கிறார் பாவலரேறு. ஆகவே, அப் பார்ப்பனீயத்திடம் பகை பாராட்டி வருவதில் அவர் நாணமடையவில்லை! அதனை அடியோடு எதிர்த்தே வருகிறார்! 'தொலையாத போராட்டம்; ஓயாத தொல்லை'—இந்த அவக்கேடான நிலைமையால் 'வடவர்' இறங்கி வந்து ஏற்படுத்திக் கொண்ட உறவு என்ன? அடிமைகளின் குரல்—வடவர்க்கு 1970 களில் எட்டுவதில்லை. எட்டிய போதும் வடக்கு தெற்குக் கிடையே உறவு ஒட்டுவதுமில்லை.

''மல்லிக்குச் சுக்கொன்று வேண்டுவதென்றால்
மாதங்கள், ஆண்டுகள் காத்திடல் நன்றோ?''

என்று பாவலரேறு கேட்கிறார்.

தெற்குக்கும் வடக்குக்கும் உள்ள முரண்பாட்டைச் சுட்டிக் காட்டியுள்ள பாவலரேறு, இப்பாட்டில் தமிழனுக்கு மட்டும் குரல் கொடுக்கவில்லை; தமிழினம் அனைத்துக்குமான ஞாயம் கூறப்பட்டுள்ளது. ஆனால், இன்று 'தமிழன்' பற்றியுள்ள விடுதலை-யுணர்ச்சி, 'தமிழின'—திராவிட முழக்கத்திலிருந்து வேகம் பெற்றுள்ளது. பாவலரேறு தன்னாட்சி வேண்டுவதன் உட்கிடக்கை தமிழனை உள்ளடக்கியதாக ஒருகால் விளங்கியுள்ளது. இன்று தமிழனுக்காக முன்கை எடுத்து வருகிறது அவர் பாடல்!

'வடக்கிலோ மேன்மேலும் அதிகார வீக்கம்;
வருமான வீழ்ச்சியோ தெற்கினைத் தாக்கும்!

என்ற வரிகள், வடவாரியப் பார்ப்பனக் கட்டமைப்பை உடைத்து நொறுக்கத் தெற்கினைத் திரட்ட வல்லன. ஆனபோதும், தமிழன் தன்னுரிமைக்கான போராட்டத்தைத் தமிழின் அடிப்படையில் வளர்த்தெடுக்க வேண்டியவனாக உள்ளான். ஆகவே, தமிழின முன்னேற்ற நோக்கில் தேசிய இன எழுச்சியைத் தெற்கில் திரட்ட வேண்டிய புதிய கண்ணோட்டம் ஏற்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடே...'தமிழின முன்னேற்றக் கழகம்! தமிழரின் துணை வலியை—ஆரிய மயப்படுத்தல் மூலம், கன்னடம். தெலுங்கு...முதலிய தமிழின மொழிகள் தமக்குள் பகைமை கொள்ளச் செய்து—இழக்கப் பண்ணும் சூழ்ச்சிகளை நாம் கருதுதல் வேண்டும்!

'உழைப்பவன் சாகின்றான்', 'ஏய்ப்பவன் துய்க்கின்றான்', 'பிறநாட்டில் கையேந்தும் வாழ்வென்ன வாழ்வோ?' போன்ற கருத்துகள் மூலம், 'தமிழரின் முரண்பட்ட வாழ்நிலை'யை அம்பலப் படுத்தி, உழைக்கும் தமிழரை ஒரு சேர அழைப்பதை உய்த்துணரலாம்!

○

○ : 1416 : என் அரும் பெறல் ஆசிரியரீர், வணக்கம்.

அண்மையில், சென்னையில், 18-7-90 அன்று நிகழ்ந்த தமிழீழ ஆதரவு ஊர்வலமும், பொதுக் கூட்டமும் சிறப்புற அமைந்திருந்தன. வெற்றியுடன் முடிந்தன. எனினும் இறுதி வரை என்னால் இருக்க முடியவில்லை. நெடுந்தொலைவிலிருக்கும் வீட்டிற்குத் திரும்ப ஏதுவாகப் பாதியில் புறப்பட்டு விட்டேன்.

ஆனாலும் 'குடிநாயக (சனநாயக) மக்கள் முன்னணி'' என்று ஓர் அமைப்பு. அவ்வமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் அன்றைய நிகழ்ச்சியில் வந்து கலந்து கொண்டனர் அவர்கள் வண்டலூர்ப் பகுதியிலிருந்து வந்தவர்கள். கூட்டத்தின் இறுதி வரை இருந்து திரும்பிய அவர்கள் தங்களது பேச்சை வெகுவாகப் பாராட்டினர், இதுதான் அவர்கள் கேட்ட தங்களின் முதல் பேச்சுப் போலும்.

ஈழச்சிக்கலின் உண்மையை உண்மையாகப் பேசியதாகவும், அ'து ஆழமாக அமைந்திருந்ததெனவும் கூறிவியந்தனர். தாங்கள் அவர்களின் கண்களுக்கு ஓர் அறிஞராகத் தெரியாமல் போராளிகளின் தலைவனாகத் தெரிவதாகச் சொல்லி மகிழ்ந்தனர். தங்களிடமிருந்து காலத்தின் நடைமுறைக்கேற்ற நிறைய உண்மைகளைத் தெரிந்து கொள்ள முடியும் என்று தங்கள் கருத்தைத் தெரிவித்ததுடன், தமிழ்நாட்டின் சிக்கல்களின் தீர்வுக்கும் அமையவிருக்கும் போராட்டக் களத்துக்கும் தங்களையே வழி காட்டியாக—ஆசானாக—வைக்கலாம் என்றனர், ஆம். காலம் அதனைக் கூட்டி வைக்கும்!

இப்படிக்கு
அன்றும் இன்றும் என்றும், தங்கள் மாணவன்
பாவலர். இளஞ்சித்திரன்—சென்னை 48.

○ : 1417 : அன்பும் ஆற்றலுங் கெழுமிய அறிவு சான்ற பெரியீர், அன்பனின் வணக்கம்.

தங்களின் நட்பையும் தொடர்பினையும் இது நாள் வரை பெறாமல் இருந்து விட்டதை எண்ணி வருந்துகின்றேன்.

தங்களின் அறிவு சான்ற பேச்சினை (2-7-90 அன்று புதுவையில் நிகழ்ந்த தமிழ்மணியின் திருமணத்தின் போது) தாங்கள் நிகழ்த்திய தலைமைச் சிறப்புப் பேருரையினையும், பின்னர் உணவு விடுதியில் அன்பர் பலருடன் நிகழ்த்திய கலந்துரையாடலையும் கேட்டதிலிருந்து என் உள்ளம் தங்களை மிகவும் மதிக்கிறது; நேசிக்கிறது. திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் யார் யாரையோ கும்பல் கூட்டிவைத்துக் கொண்டு இருக்கின்றாரே. அவர் தங்களை வெளி நாடுகளில் தமிழ் மக்கள் வாழ் பகுதிகளுக்கு அனுப்பிக் கருத்துப் பரப்புதல் செய்ய ஏற்பாடு செய்தால் என்ன? அவர்க்கு எடுத்துச் சொல்வார் யாருமில்லையா?

புத்தரும், அசோகரும். கொள்கை பரப்ப ஆயிரமாயிரம் மாணவர்களை—புத்ததேரர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினார்களே, அதுபோல் உங்கள் தலைமையில் ஒரு தக்க குழுவினை அனுப்பி வைத்தால் என்ன?

குமுகாயச் சீர்திருத்த நிறுவனம் என்ற பெயரால், துருக்கர்களையும், கிறித்துவர்களையும் தூக்கிப் பையில் போட்டுக் கொண்டு அரசியல் நடத்திக் கொண்டும், அவர்களின் (பணப்)பையில் தாம் நுழைந்து கொண்டு அவர்களின் வாழ்வுக்கு வெளிச்சம் போட்டுக் கொண்டும் திரிகிறாரே, அது தேவையா? சரியா நெறியா? நியாயமா?

வீரமணி, துதிபாடிக் கூட்டத்தை வாழ்வித்துக் கொண்டும், தம் வாழ்வுக்கும் புகழுக்கும் விளக்கடித்துக் கொண்டும் இருப்பது

தானு இன்றைய வேலே? அவருடைய போக்கு சரியன்று என்பது என் நோக்கு.

தங்களைப் போன்றவர்கள் அதிலே தலையிட்டு அவரின் போக்கினை எதிர்கால நோக்கில் திசை திருப்ப முயன்றால், தமிழகத்தில் தீவிரப் போர் முறைக்கு வழி வகுத்தால் (ஈழ விடுதலைப் புலிகள் போரைப் போல)தனித் தமிழகத்தை வென்றெடுக்க இயலும் என்பது என் துணிவு.

தங்கள் தொண்டன்
—புலவர். நதி, புதுச்சேரி 8.

○ : *1418* : பேரன்புசால் பாவலரேறு அய்யா அவர்களுக்கு வணக்கம். நீண்ட இடைவெளிக்குப் பின் இம்மடல் எழுதுகிறேன். *30-4-90* இதழ் பார்த்தேன். தனித்தமிழ் குழுவிலிருந்து தி. மு. க. அல்லது தி. க. வட்டங்களுக்குள் நாம் வாழவும் வளரவும் விரும்பினால் தமிழ்க்குடிமகனைப் போல் கொள்கைகளை (தனித்தமிழ் (அ) தூயதமிழ்)விட்டு விடத்தான் வேண்டியுள்ளது. சாத்தையா இப்போது பதவி, பணக்காரர்கள் சுற்றம் என்ற வலையில் சிக்கிக் கொண்டமையால் மேலும் பல கொள்கைகளையும் கூட விட வேண்டிவரும். இருப்பினும் தாங்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. கலைஞருக்குத் தூயதமிழ் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இய்லாது என்பதும் பெரிய உண்மையே.

''நுணங்கிய கேள்விய ரல்லால் வணங்கிய
வாயின ராதல் அரிது''
—குறள் : 419

தி. நா. அறிவரசு, திருப்பூர்-1.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் நிறைந்த—குளிர் கொல்லும் நாட்டில் எத்தகைய மின் கருவிகளும் இல்லாத—அவல வாழ்வில் ஆங்காங்கே வாழ்வதையும் படம் பிடித்துக் காட்டினர்.

எனவே அன்பற்ற பொதுவுடைமை அறிவற்றது. கலை, இலக்கியப் பண்பாடெல்லாம் பொருளியலைக் கொண்டுதான் பிறப்பதாகப் பிதற்றும் சுப்பு கீழை ஐரோப்பிய நாடுகளின் பொதுவுடைமை இயக்கத்திற்குக் காரணம் கூற வேண்டும். கலை, இலக்கியம், பண்பாடு இவை காலங்காலமாக ஓர் இனத்தில் ஆணிவேராக இயல்பாக வளர்ந்து வருபவை. அவற்றுடன் பொதுவுடைமைக் கொள்கையை இணைத்து அறமும் அன்பும் அறிவும் கொண்ட கொள்கையை உருவாக்குவதுதான் தென்மொழிப் பாசறையின் அடிப்படைக் கொள்கை. புரட்சிக்கும் ஒற்றுமைக்கும் தமிழ்நாட்டைப் பதப்படுத்தும் களமே தென்—மொழி என்பதைச் சுப்பு போன்றவர்கள் உணர்ந்தால் நல்லது. பழைய வ. பொதுவுடைமைக் கட்சி சுப்பு என்று ஒருவர் கூலிக்கு கொ. ப. செ. செயலலிதாவுக்கு மேடைப் பேச்சை எழுதிக் கொடுத்துத் திருப்பணி புரிந்தார் என்பது உலகறிந்த செய்தி. நம் சுப்புவும் அவர் போலியர் தாமோ?

அன்பு மாணாக்கர்
— அரிமா வளங்கோ, செருசி. பிரான்சு.